விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 16 புதன்கிழமை (29.04.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 131

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# இறுதி ஒருவரை மீட்கும் வரையும் இராணுவ நடவடிக்கை தொடரும்!


## ஜனாதிபதி மகிந்த அறிவிப்பு



(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இறுதியாகவுள்ள ஒருவரை மீட்கும் வரையும் இராணுவத்தின் மீட்பு நடவடிக்கைகள் தொடரும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சி.என்.என். செய்திச் சேவையின் ஐ.பி.என்னுக்கு வழங்கிய விசேட நேர் காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினை குறித்து ஒபாமா தலைமையில் ஆராய்வு



(வாஷிங்டன்)

இலங்கையில் மோசமடைந்து செல்லும் மனித உரிமை நிலைமைகள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தலைமையிலான நிர்வாகம் ஆராய்ந்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள், பாதுகாப்புத் திணைக்களமான பென்டகன் அதிகாரிகள், தேசிய பாதுகாப்பு சபை அதிகாரிகள், அமெரிக்க அபிவிருத்தி திட்டத்தின் பிரதிநிதிகள், வெள்ளை மாளிகையின் சிரேஷ்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் வெளியுறவு அமைச்சர் இலங்கை வர அனுமதி மறுப்பு

### தூதுவரை மீள அழைத்தது சுவீடன்

(கொழும்பு)

சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சர் கார்ள் பில்ட் இலங்கை வருவதற்கு அரசாங்கம் அனுமதி மறுத்துள்ளது. இதையடுத்து இலங்கைக்கான தமது நாட்டுத் தூதரை அவசர ஆலோசனைக்காக சுவீடன் அரசு அழைத்துள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் நிறுத்தமொன்று ஏற்படவேண்டும் என (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரனை காப்பாற்ற இந்திய அரசாங்கம் முயற்சி

### குற்றஞ்சாட்டுகிறார் சோமவன்ச

(கொழும்பு)

இந்தியாவின் பல்வேறு வகையான அழுத்தங்களுக்கு இலங்கை அரசு அடிபணிந்துள்ளதாக ஜே.வி.பி குற்றம் சாட்டியுள்ளது.

தேசிய கேட்போர்கூட கட்டிடத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கம் (12ஆம் பக்கம் பார்க்க)



நேற்று இடம்பெற்ற தாக்குதலில் காயமடைந்து வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் ஒருவர்.



சடலத்தின் முன் கதறியழும் பெண்

## பிரபாகரன் உள்ள இடத்தை படையினர் நெருங்கிவிட்டனர்

### பாதுகாப்பு அமைச்சு கூறுகிறது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மறைவிடத்தை இராணுவத்தின் 58-வது படையணி நெருங்கியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன.

புலிகளின் பிடியிலுள்ள பொதுமக்களை மீட்கும் மனிதநேய நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் 53ஆம் 58ஆம் படையணியினர் கரையாமுள்ளி வாய்க்கால் பகுதியை (12ஆம் பக்கம் பார்க்க)

## முடிபின்றித் தொடரும் அவுஸ்.தமிழர் போராட்டம்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள பிரதமரின் இல்லத்தை முற்றுகையிட்டுள்ள சிட்னியில் வசிக்கும் தமிழர்கள் இலங்கையில் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் உடனடியாக போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான அழுத்தத்தை அவுஸ்திரேலியா கொடுக்க வேண்டும் என வலியுறுத்தும் (12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் அகோர ஷெல் வீச்சு 200க்கும் அதிகமானோர் பலி;

### 1500 பேர்வரை காயம் எனவும் தெரிவிப்பு

(வவுனியா)

முல்லைத்தீவு மக்கள் பாதுகாப்பு வலய பகுதி நோக்கி நேற்று முன்தினம் மாலையிலிருந்து நேற்றுப் பிற்பகல் வரை மேற்கொண்ட அகோரமான பீரங்கி மற்றும் வான் தாக்குதல்களில் 200க்கும் மேற்பட்ட பொது மக்கள் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என தமிழ் நெற் செய்தி வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, (12ஆம் பக்கம் பார்க்க)

Lifeline




சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்

உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி

தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.இல 1039 கொழும்பு

# வன்னிப் பேரவலம்...



# இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவ

# 25 கோடி ரூபாய் நிவாரண உதவி

## தமிழக அரசு அறிவிப்பு

(சென்னை)

வடக்கில் யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு 25 கோடி நிவாரண உதவி வழங்கப்படவுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவும் பொருட்டு தமிழக அரசின் சார்பில் முதற்கட்டமாக ஏற்கனவே 80 ஆயிரம் குடும்பங்களுக்குத் தேவையான அரிசி,பருப்பு,சர்க்கரை,தேயிலை,சவர்க்காரம், பற்பசை மற்றும் துணி வகைகள் கொண்ட 10 கோடியே 6 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் கடந்த நவம்பர் மாதம் கப்பல் மூலமாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டது.

பின்னர் அவை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இலங்கைத் தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

மேலும்,இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவுவதற்காக இரண்டாம் கட்டமாக 40 ஆயிரம் குடும்பங்கள் பயனடையும் வகையில் 6 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உணவுப் பொருட்கள் மற்றும் துணி வகைகளுடன் சமையல் பாத்திரங்களும், நிவாரணப் பொருட்களாக 40 ஆயிரம் சிப்பங்களில் கடந்த 22ஆம் திகதி அன்று கப்பல் மூலமாக இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

இவை மிக விரைவில் தற்காலிக முகாம்களில் தங்கியுள்ள போரினால் பாதிக்கப்பட்ட இலங்கை தமிழ் குடும்பங்களுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக விநியோகிக்கப்பட உள்ளன.

இது தொடர்பாக தமிழக அரசு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இலங்கையில் தற்காலிக முகாம்களுக்கு தற்போது கூடுதலாக இடம் பெயர்ந்து வந்து சேர்ந்துள்ள இலங்கை தமிழ் மக்களுக்கு விநியோகிப்பதற்காக மூன்றாம் கட்டமாக ஏறத்தாழ 7 கோடி ரூபாய் மதிப்புடைய மேலும் 50 ஆயிரம் குடும்பங்களுக்கான நிவாரணப் பொருட்கள் அடங்கிய சிப்பங்களை இலங்கைக்கு அனுப்பி வைக்க தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது.

வழக்கமாக அனுப்பப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் துணி வகைகளுடன் இம் முறை குடிநீரை சுத்திகரிக்க தேவையான வில்லைகளும் 10 ஆயிரம் கிலோ எடையுள்ள, குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களும் சேர்த்து அனுப்பப்படுகின்றன.

இந்த நிவாரணப் பொருட்களும் இலங்கையில் உள்ள இந்திய தூதரத்துக்கு எதிர் வரும் மே மாதம் 5ஆம் திகதிக்குள் சென்னை துறைமுகத்திலிருந்து அனுப்பப்பட்டு அங்குள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாயிலாக பாதிக்கப்பட்ட இலங்கை தமிழ் மக்களுக்கு விநியோகிக்கப்படும்.

அந்த நிவாரணப் பொருட்களுடன் இலங்கையில் துயருறும் தமிழ் மக்களுக்காக தமிழக அரசு திரட்டிய பணத்தில் மீதப்பட்ட 25 கோடி ரூபாயை தமிழக அரசின் சார்பில் நிதி உதவியாக வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத் தொகை மத்திய அரசு அறிவித்துள்ள ஒதுக்கீடான ரூபாய் 100 கோடியுடன் சேர்த்து 125 கோடி ரூபாயாக போரால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு தேவையான உதவி நடவடிக்கைகளை மேற்கொள்ள பயன்படும் என அதில் கூறப்பட்டுள்ளது. (ச-5)

## சுதேச விளையாட்டு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த சுதேச விளையாட்டு விழா நாளை 30ஆம் திகதி வியாழக்கிழமை காலை கல்லூரி வீரசங்கிலியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்துள்ளார். (ச)

## பல்கலைக்கழக மாணவி விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் யாழ்.பல்கலைக்கழக இறுதிவருட மாணவி ஒருவர் படுகாயமடைந்துள்ளார். காயமடைந்த மாணவி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொற்பதி வீதி,கொக்குவிலைச் சேர்ந்த, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இறுதி வருட மாணவியான எஸ்.சிவரூபி (வயது 24) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பிரஸ்தாப மாணவி மோட்டார் சைக்கிளில் சென்ற போது பிறவுண் வீதி, நீராவியடியில் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்பட்டது. (ச-7)

## திருமலை-காங்கேசன் கப்பல் சேவை மே முதலாம் திகதி

(திருகோணமலை)

திருகோணமலையிலிருந்து காங்கேசன் துறைக்கான கப்பல் சேவை நாளை மறுதினம் முதலாம் திகதி மேற்கொள்ளப்படும் என திருகோணமலை அரச அதிபர் தெரிவித்தார். இக் கப்பல் மீண்டும் மறுநாள் 2ஆம்திகதி திருகோணமலைக்கு புறப்படக்கூடும் என அவர் கூறினார்.

இதேவேளை காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை கடந்த 25ஆம் திகதி இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## தொழில்நுட்ப உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இன்சூவரன்ஸ் நிறுவன யாழ். பிராந்திய போர்முலா பிளஸ் தொழில்நுட்ப உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர். வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த நாகசெல்வம் ராஜகாந்தன் (வயது 35) என்பவரே விடுவிக்கப்பட்டவராவார். இவர் தான்காணாமல் போன சம்பவம் தொடர்பாக எதுவும் கூறவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை ராஜகாந்தனை விடுவிக்கக் கோரி சிறிலங்கா இன்சூவரன்ஸின் யாழ். கிளை பணியாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ‘தூரப்போகும் நாரைகள்’ நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டம் நடத்தும் தாட்சாயணியின் ‘தூரப்போகும் நாரைகள்’ சிறுகதை தொகுப்பு நூல் அறிமுக விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் ‘செங்கை ஆழியான்’ க.குணராசா தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் வாழ்த்துரைகளை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை,கவிஞர் கல்வயல் குமாரசுவாமி ஆகியோர் நிகழ்த்துவர். வெளியீட்டுரையை கோப்பாய் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் ஆற்றுவார். (ச)

# இன்று ஒரு தகவல்

## நல்லவர் யார்?

ஒரு நாட்டில் ஒரு ராஜா இருந்தார். அவர் மிகவும் வித்தியாசமானவர்.

எந்த வகையில் வித்தியாசமானவர் என்று கேட்டால் மக்களிடம் வரி வசூலிப்பதில் வித்தியாசமானவர்.

மற்ற மன்னர்கள் மாதிரி இவர் நேரடியாக வரிவசூலிப்பதில்லை. அதை மறைமுகமாகச் செய்வார்.

அரண்மனையிலிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மரக்கால் நெல்லை அனுப்புவார். அதை அவர்கள் வாங்கிக் கொண்டு ஒரு மரக்கால் அரிசியைக் கொடுக்க வேண்டும்.

இதுதான் அந்த நாட்டு வழக்கம். இதைத்தவிர வரி ஏதும் வசூலிப்பதில்லை. இந்த விடயம் மேலோட்டமாக பார்ப்பதற்கு சாதாரணமாக தெரிந்தாலும் குடிமக்கள் மிகவும் கஷ்டப்பட்டார்கள்.

ராஜா கொடுக்கும் நெல்லையும் அரிசியாக்க வேண்டும். அத்தோடு மேலதிகமாக அதேயளவு அரிசியையும் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

என்ன செய்வது? மக்கள் ராஜாவைத் திட்ட ஆரம்பித்தார்கள். இந்த ராஜா எப்பொழுது இறப்பார் என்று எதிர்பார்க்க ஆரம்பித்தார்கள். சிலர் வெளியூர்களுக்கும் போய் விட்டார்கள்.

மக்கள் எதிர்பார்த்தது போலவே நடந்தது. அந்த மன்னன் நோய் வந்து படுத்த படுக்கையாகி விட்டான். மன்னர் இறக்கப் போகிறார் என்று தெரிந்தும் மக்கள் எவரும் பார்க்க வரவில்லை.

"ஏன் என்னை யாருமே பார்க்க வரவில்லை?" என்று மந்திரியிடம் கேட்டார் ராஜா.

"நம் நாட்டில் மக்கள் எங்கே இருக்கிறார்கள் பார்க்க வருவதற்கு?" என்றார் அவர்.

"ஏன் என்ன ஆயிற்று?" அவர்களுக்கு என்று கேட்டார் ராஜா.

அமைச்சர் அப்பொழுதுதான் அரசனுக்கு அவன் செய்த தவறை சுட்டிக் காட்டினார். மக்களுக்கு இழைத்த கொடுமையை எடுத்துச் சொல்லி புரிய வைத்தார்.

மன்னருக்கு ஞானோதயம் வந்தது. செய்த பாவங்களை எண்ணி வருத்தப்பட்டான். மெதுவாக அமைச்சரின் பக்கம் திரும்பி "எங்கே என் மகன்?" அவன் எங்கிருந்தாலும் உடனே அழைத்துக் கொண்டு வாருங்கள் என்று உத்தரவிட்டார்.

அடுத்த நாள் இளவரசனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள்.

"தந்தையே நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள்" என்று கேட்டான்.

"மகனே நான் மக்களுக்கு பொல்லாதவனாகி விட்டேன். அவர்களெல்லாம் என்னை நல்லவன் என்று சொல்ல வேண்டும். அப்படி அவர்கள் சொல்ல வைக்க வேண்டியது உன்னுடைய பொறுப்பு" என்றார்.

"தந்தையே நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களை மிகவும் நல்லவர் என்று மக்கள் சொல்லும் படி வைக்கிறேன்" என்றான் மகன்.

அதன் பின்னர் மகன் பட்டத்துக்கு வந்தான். வரி வசூலிக்கும் முறையில் ஒரு மாற்றத்தை உண்டு பண்ணினான்.

ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மரக்கால் உமியை கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக ஒரு மரக்கால் அரிசியை வாங்கினான்.

அப்பா நெல்லைக் கொடுத்துவிட்டு அரிசி வாங்கினார். இவன் உமியைக் கொடுத்துவிட்டு அரிசி வாங்கினான்.

சிறிது காலத்தின் பின்,

ஒருநாள் அமைச்சரைக் கூப்பிட்டு,

"அமைச்சரே மக்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள்" என்று விசாரித்தான்.

"உங்கள் தந்தை மிகவும் நல்லவர்" என்று பேசிக் கொள்கிறார்கள் என்றார் அமைச்சர்.

எப்படி இருக்கிறது பாருங்கள்.

அப்பாவுக்குக் கொடுத்த வாக்கைப் பிள்ளை காப்பாற்றி விட்டான். இந்தக் காலத்திலும் இது மாதிரி அப்பாவுக்கு உதவும் பிள்ளைகள் உண்டு.

"நான் எனது அப்பாவுக்கு மிகவும் உதவியாக இருக்கிறேன்" என்றான் ஒரு பிள்ளை.

"அப்படியா? உங்கள் அப்பா என்ன செய்து கொண்டிருக்கிறார்?" என்று கேட்டேன்.

"சும்மா தான் இருக்கிறார்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழ். கல்வி வலய மெய்வன்மைப் போட்டியின் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வி வலய மெய்வன்மைப் போட்டிகள் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நேற்றுக் காலை ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதில் மூன்றாம் நாள் நிகழ்ச்சிகள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை நடைபெறவுள்ளது. நாளை நடைபெறவுள்ள நிகழ்ச்சிகளின் விபரம் வருமாறு,

17 வயது பெண் 800 மீற்றர் ஓட்டம்- இறுதி, 21 வயதுப் பெண் 800 மீற்றர் ஓட்டம்- இறுதி, 17 வயது ஆண் 800 மீற்றர் ஓட்டம், 15 வயதுப் பெண் உயரம்பாய்தல் - இறுதி, 17வயது பெண் குண்டு எறிதல் - இறுதி, 19வயது பெண் ஈட்டி எறிதல்- இறுதி, 13 வயது ஆண் 200மீற்றர் ஓட்டம் - தெரிவு, 15 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- தெரிவு, 19 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- தெரிவு, 15 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம்- தெரிவு. 19 வயது பெண் 200 மீற்றர் ஓட்டம்- தெரிவு, 19 வயது ஆண் உயரம் பாய்தல்- இறுதி, 17 வயதுப் பெண் நீளம் பாய்தல்- இறுதி, 21 வயது ஆண் 4X400 மீற்றர் அஞ்சல்- இறுதி, 19 வயதுப் பெண் 4X400 மீற்றர் அஞ்சல்- இறுதி, 21 வயது ஆண் உயரம் பாய்தல்- இறுதி, 13 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 21 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 17 வயது ஆண் உயரம் பாய்தல்- இறுதி.

19 வயதுப் பெண் உயரம் பாய்தல்- இறுதி, 19 வயது ஆண் ஈட்டி எறிதல்- இறுதி, 21 வயது ஆண் குண்டெறிதல்- இறுதி, 17 வயதுப் பெண் ஈட்டி எறிதல்- இறுதி, 17 வயது ஆண் முப்பாய்ச்சல்- இறுதி, 15 வயதுப் பெண் 4X400 மீற்றர் அஞ்சல், 15 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம்- இறுதி, 13 வய துப் பெண் 100 மீற்றர் ஓட்டம்- இறுதி, 19 வயது ஆண் 100 மீற்றர் ஓட்டம்- இறுதி.

21 வயது பெண் 100 மீற்றர் ஓட்டம்- இறுதி, 11 வயது ஆண் 75 மீற்றர் ஓட்டம்- இறுதி, 17 வயது ஆண் 1500 மீற்றர் ஓட்டம்- இறுதி, 17 வயதுப் பெண் 100 மீற்றர் தடை தாண்டல், 15 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 19 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 19 வயது பெண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 19 வயது ஆண் 110 மீற்றர் தடைதாண்டல்- இறுதி, 15 வயது ஆண் 4X100 மீற்றர் அஞ்சல்- இறுதி, 17 வயது ஆண் 4X100 மீற் றர் அஞ்சல் - இறுதி, 17 வயது ஆண் 4X400 மீற்றர் அஞ்சல் - இறுதி, 19 வயதுப் பெண் 800 மீற்றர் ஓட்டம்- இறுதி, 21 வயது ஆண் 800 மீற்றர் ஓட்டம்- இறுதி, 19 வயது ஆண் 800 மீற்றர் ஓட்டம்- இறுதி, 15 வயது ஆண் நீளம் பாய்தல்- இறுதி, 17 வயது ஆண் தட்டெறிதல்- இறுதி, 21 வயதுப் பெண் தட்டெறிதல்- இறுதி.

13 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம் - தெரிவு, 17 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- தெரிவு, 21 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- தெரிவு, 17 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம்- தெரிவு, 21வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம்- தெரிவு, 15 வயதுப் பெண் ஈட்டிஎறிதல்- இறுதி, 21 வயதுப் பெண் குண்டு எறிதல்- இறுதி, 17 வயதுப் பெண் 4X 400 மீற்றர் அஞ்சல்- இறுதி, 21 வயதுப் பெண் 4X400 மீற்றர் அஞ்சல்- இறுதி, 19 வயதுப் பெண் நீளம் பாய்தல்- இறுதி, 13 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 21 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி.

21 வயதுப் பெண் 200 மீற் றர் ஓட்டம்- இறுதி, 19 வயது ஆண் முப்பாய்ச்சல்- இறுதி, 15 வயது ஆண் தட்டெறிதல்- இறுதி, 21 வயதுப் பெண் உயரம்பாய்தல்- இறுதி, 21 வயது ஆண் முப்பாய்ச்சல்- இறுதி, 15 வயது ஆண் 4X400 மீற்றர் அஞ்சல்- இறுதி, 13 வயது ஆண் 100 மீற் றர் ஓட்டம்- இறுதி, 15 வயதுப் பெண் 100 மீற்றர் ஓட்டம்- இறுதி, 13 வயதுப் பெண் 100 மீற்றர் ஓட்டம்- இறுதி, 21 வயது ஆண் 100 மீற்றர் - இறுதி.

11 வய்துப் பெண் 75 மீற்றர் ஓட்டம்- இறுதி, 19 வயது ஆண் கோலூன்றிப் பாய்தல்- இறுதி, 19 வயதுப் பெண் 100 மீற்றர் தடை தாண்டல். 15 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 17 வயதுப் பெண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 17 வயது ஆண் 200 மீற்றர் ஓட்டம்- இறுதி, 17 வயது ஆண் 110 மீற்றர் தடைதாண்டல்- இறுதி, 15 வயதுப் பெண் 4X 100 மீற்றர் அஞ்சல்- இறுதி, 19 வயதுப் பெண் 4X100 அஞ்சல்- இறுதி, 19 வயது ஆண் 4X400 மீற்றர் அஞ்சல்- இறுதி

(ஓ)



சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தினால் சிறுவர்களுக்கான இசையால் இணைவோம் எனும் இன்னிசை நிகழ்வு புதுவருட தினத்தன்று அச்சுவேலி இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்வில் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் இயக்குனர் பிரவீன் அடிகள், வீடியோ கலாமினி உரிமையாளர், அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் ஆகியோர் வலுவிழந்த சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படம் : உரும்பிராய் நிருபர்)

## இராசி பலன்

29.04.2009

(சித்திரை 16, புதன்கிழமை)

பஞ்சமி முன்னிரவு 11.28 மணிவரை

மிருகசீரிடம் முற்பகல் 8.30 மணிவரை

இராகுகாலம் 11.58-1.28 மணிவரை

சுபநேரம் 4.28-5.58 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | புதிய பொருள் சேர்க்கை, காரிய நன்மை, வாக்குமேன்மை, இனிய சம்பவம். |
| இடபம் | சயன சுகக் குறைவு, முயற்சி தாமதம், தனவிரயம், மாதர் நட்பு. |
| மிதுனம் | நண்பர்கள் உதவி, ஆழ்ந்த சிந்தை, சயனசுகம், புதிய முயற்சி. |
| கடகம் | உணர்ச்சி வசப்படல், பிரயாணம், முயற்சி தாமதம், தனவிரயம். |
| சிங்கம் | மனமகிழ்ச்சி, குடும்ப மகிழ்ச்சி, காரிய அனுகூலம், தனலாபம். |
| கன்னி | சுப நிகழ்வு, தூர தேசச் செய்தி, நண்பர்கள் உதவி, ஆரோக்கியம். |
| துலாம் | உடல் உழைப்பு, அச்சமான நிலை, கட்டுப்பாடு, பிதாசிந்தை. |
| விருச்சிகம் | காரிய தடங்கல், வீண் பகை, உடல் நலக்குறைவு, போசன சுகம். |
| தனுசு | எடுத்த காரியம் கைகூடும், திடீர் பயணம், புகழ், பண வருவாய். |
| மகரம் | நோய் குணமடைதல், செய் தொழில் விருத்தி,முயற்சி கை கூடும், தனவரவு. |
| கும்பம் | மனச்சோர்வு, காரிய இடையூறு, செய்தொழில் விருத்தி, தனவிரயம். |
| மீனம் | பயந்த சுபாவம், தொழில் சிந்தை, சுபசெலவு, வாகன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 150 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 35 |
| தக்காளி | 200 | 180 | 100 |
| அவரை | - | - | - |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 |
| கோவா | 20 | 30 | 10 |
| கரட் | 40 | 50 | 25 |
| பூசணி | 15 | 20 | 08 |
| புடோல் | 20 | 40 | 20 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 25 | 35 | 35 |
| பெரிய வெங்காயம் | 120 | 140 | -- |
| பாகற்காய் | 80 | 100 | 35 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 35 |
| கரணைக் கிழங்கு | 40 | 50 | -- |
| பயிற்றங்காய் | 30 | 40 | 35 |
| லீக்ஸ் | 140 | 160 | 70 |
| போஞ்சி | - | - | - |
| கீரை - 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 70 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |





"சமரபாகு" சீனா உதயகுமாரின் வெற்றியுடன், உடைந்த நினைவுகள் எனும் இரு கவிதை நூல்களின் வெளியீட்டு விழா அண்மையில் கொற்றாவத்தை அ.மி.த.க பாடசாலையில் நடைபெற்றது. விழாவிற்கு தலைமை தாங்கிய ஆசிரியர் தி.சுபாகரன் உரையாற்றுவதையும், விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும், மூத்த கவிஞர் சோ.ப. வெளியீட்டுரை நிகழ்த்துவதையும் சிறப்புப் பிரதியை பேராசிரியர் மா.நடராஜசுந்தரத்திடமிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர் க. கந்தசாமி பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம்.

# க.பொ.த உ/த வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக திருத்தம் செய்யப்பட்ட சுற்று நிருபம்

(கொழும்பு)

க.பொ.த உயர்தர வகுப்புகளுக்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக 2008.03.07 ஆம் திகதி கல்வியமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2008/17 இலக்க சுற்று நிருபத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் வீ.இராசையா சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் 2008/17 இலக்க சுற்று நிருபத்தின் பிரிவு 2.1. 31.12.2008 ஆம் திகதிய 2008/17(1) சுற்று நிருபம் பின்வருமாறு திருத்தம் செய்யப்படல் வேண்டும்.

* பழைய பாடத் திட்டத்தின் பிரகாரம் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் தாய் மொழி, கணிதம் உள்ளடங்கலாக கட்டாயப் பாடங்களில் 6 பாடங்கள் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் குறைந்த பட்சம் 3 பாடங்களில் திறமைச்சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும். மேற் படி தகைமைகளைப் பூர்த்தி செய்வதற்கு மேலதிக பாடங்களில் பெறுகின்ற சித்திகளையோ அல்லது திறமைச்சித்திகளையோ உபயோகப்படுத்த முடியாது.

* 2007 இல் அறிமுகப்படுத்தப் பட்ட புதிய பாடத்திட்டத்தின் பிரகாரம் க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் தாய்மொழி, கணிதம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் அதில் குறைந்த பட்சம் 3 பாடங்களில் திறமைச்சித்தி அல்லது அதற்கு மேற்பட்ட சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும்.

சுற்று நிருபத்தில் 2.5 (அ) 1 உப பிரிவு பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.


கலைப் பாடப்பரப்பின் 2.1, 2.2 உப பிரிவுகளில் குறிப்பிடப்பட்டிருக்கும் 3 திறமைச் சித்திகளில் ஒன்றேனும் க.பொ.த உயர்தர பரீட்சைக்கு தெரிவாகும் பாடங்களுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

சித்திரம் அல்லது சங்கீதம் அல்லது நடனம் அல்லது நாட்டியம் மற்றும் அரங்கக்கலை ஆகிய பாடங்களில் ஏதேனுமொரு பாடத்தை மேற்படி பாடப்பரப்புக்குள் கற்க விரும்பும் மாணவர் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் குறித்த பாடத்துக்கு திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

அழகியல் கல்வியில் இரண்டு பாடங்களை கற்பதாயின் அதில் ஒரு பாடத்தில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

செயல் முறையுடன் கற்பதற்குத் தேவையான திறமைச் சித்திகள் எனும் தேவையை மட்டும் மேற்படி உப பிரிவு 2.3 பிரகாரமும் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

மேற் குறிப்பிட்டுள்ள திருத்தங்களுக் கமைவாக 2008/17 இலக்க சுற்று நிருபத்தை எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுத்துதல் வேண்டுமெனவும், அச் சுற்று நிருபத்தின் ஏனைய விடயங்கள் யாவும் அதே விதமாக செயற்படும் என்றும் அச்சுற்று நிருபத்தில் வலியுறுத் தப்பட்டுள்ளது. (ஓ-6)



யாழ்.செய்திகள்

## மெய்வல்லுனர் பயிற்சி முகாம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் தென்மராட்சி பாடசாலை மாணவர்களுக்கான மெய்வல்லுனர் பயிற்சி முகாம் இன்றும் நாளையும் மற்றும் மே மாதம் 2 ஆம் திகதி ஆகிய 3 தினங்களில் காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி றிபேக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-4-29)

## உழைப்பின் மகிமையை உலகுக்கு உணர்த்திய தொழிலாளி தூய சூசையப்பர்

(ஊர்காவற்றுறை)

உழைப்பின் மகிமையை உலகுக்கு உணர்த்திய தொழிலாளர் தூய சூசையப்பர். மே முதலாம் திகதி தொழிலாளர் தினம் உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. சிக்காக்கோ நகரில் தொழிலாளர்கள் அனைவரும் இரவு பகல் இருபத்தி நான்கு மணி நேர வேலை செய்துவந்தனர். அப்போது எங்களுக்கு எட்டு மணிநேர வேலை வேண்டும் ஓய்வு வேண்டும் என்று போராடி வெற்றி பெற்ற தினம் தான் மே முதலாம் திகதி. இத்தினமே தொழிலாளர் தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

இத்தினத்தில் தொழிலாளர்களின் பாதுகாவலராக தூய சூசையப்பரை கத்தோலிக்க திருச்சபை நியமித்துள்ளது தூய சூசையப்பரின் வழி காட்டலில் நாமும் இணைந்து தொழிலாளர் தினத்தை கொண்டாடுவோம். (ஓ-72)

## ஆங்கில வாய்மொழி போட்டி

நல்லூர் கோட்ட மட்ட ஆங்கில வாய்மொழி மூல போட்டி எதிர்வரும் மே மாதம் 09 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும் என கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஓ-30)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பசார் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (A.R.V) இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை J/78 இராசாவின் தோட்டம் அத்தியடி புதுவீதி, அம்பலவாணர் வீதியிலும், பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை 89/1, கோவில் வீதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

அத்துடன் நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிவரை J/78 பகுதி றக்கா வீதி இராசாவின் தோட்டம் 2 ஆம் ஒழுங்கையிலும் பிற்பகல் 2 மணிமுதல் 3.30 மணிவரை ஸ்ரான்லி வீதி புகையிரத நிலைய விடுதியிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத்தடுப்பூசியினை ஏற்றிக் கொள்ளுமாறு யாழ் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம. மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ-4)

## உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் இடம் பெயர்ந்தோர் தங்கவைப்பு

(அல்வாய்)

முல்லைத்தீவு யுத்த பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்த மக்களில் ஒரு பகுதியினர் நேற்று உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அப்பாடசாலை கல்வி நடவடிக்கைகள் யாவும் ஏற்கனவே அறிவித்த படி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் மாலை நேரப் பாடசாலையாக நடை பெற உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-19)

## — காலங்கடந்த பிறப்பு, இறப்பு — பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

வலி தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் காலம் கடந்த பிறப்பு மற்றும் இறப்புகளை பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை மு.ப 9.00 மணி முதல் பிரதேச செயலகத்தில் நடை பெற உள்ளதால் பிறப்பு, மற்றும் இறப்புகளை பதிவு செய்யாதவர்களும், பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களைப்பெற்று இதுவரை சமர்ப்பிக்காதவர்களும் நாளை உரிய ஆவணங்களுடன் நேரில் சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-6)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினால் திடப்புலம் புன்னாலைக்கட்டுவன் நரசிங்க வைரவ ஆலயத்தில் மகோற்சவ காலங்களில் நடத்தப்பட்டு வரும் சிறப்பு சொற்பொழிவு நிகழ்வில் இன்று புதன் கிழமை "நமது சிந்தனைகளே நமது முன்னேற்றத்தின் திறவுகோள்" எனும் விடயத்தில் செஞ்சொற் செம்மல் இரா. கேதீசனும், நாளை வியாழக்கிழமை "சைவ சமய வாழ்வியலில் இளைஞர்கள்" எனும் விடயத்தில் சைவப் புலவர் சைவ சித்தாந்த பண்டிதர் நித்தியதசீதரனும் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 8 மணிமுதல் 11 மணி வரை "இந்துமத நோக்கில் இறை தத்துவம்" எனும் விடயத்தில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தனும், "ஆலய வழிபாடு" எனும் விடயத்தில் சைவப் புலவர் நித்தியதசீதரனும் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர். (ஓ-4)

## இடம் பெயர்ந்தவர்களுக்கான உடுபுடவைகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை அமெரிக்கன் மிசன் திருச்சபையின் யாழ் பிராந்தியத்தினர் வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தங்கியுள்ள மக்களுக்காக 4 இலட்சம் பெறுமதியான உடுபுடவைகளை தென்மராட்சி பிரதேச செயலகத்தில் வழங்கியுள்ளது. இப்பொருட்கள் இடம் பெயர்ந்து தங்கியுள்ள 750 குடும்பங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 224 பேருக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-4)

## நூலக விழிப்புணர்வு செயற்பாடுகள்

(கல்வயல்)

உலக புத்தக தினம் ஏப்ரல் 23 ஐயும் எதிர்வரும் நூலக வாரத்தினையும் முன்னிட்டு சாவகச்சேரி நகர சபையின் கீழ் இயங்கும் சாவகச்சேரி பொது நூலகம், மற்றும் மீசாலை கிளைநூலகம், நுணாவில் கிளை நூல்களும் எமது பகுதிக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள பொது மக்களுக்கு நூலக விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு வீடு வீடாகச் சென்று நூலக விழிப்புணர்வு தொடர்பான துண்டு பிரசுரங்களை நூலக உத்தியோகஸ்தர்களும் நூலக ஆலோசனை சபை உறுப்பினர்களும், வாசகர் வட்ட உறுப்பினர்களும் இணைந்து விநியோகித்து வருகின்றனர். அத்துடன் நூலக புத்தக இருப்பினை அதிகரித்து நூலகத்தை மேலும் அபிவிருத்தி செய்யும் பொருட்டு பொதுமக்களிடம் இருந்து நூல்களை அன்பளிப்பாக பெற்று வருகின்றனர். பொதுமக்கள் ஆர்வமுடன் தம்மிடம் உள்ள புதிய, பழைய நூல்களை வழங்கி வருவதை காணக்கூடியதாகவுள்ளது.

இச்சேவைக்கு வழங்குவதற்கு நூல்கள் இல்லாதவர்கள் நூலக வளர்ச்சிக்காக நிதி உதவியும் செய்யலாம் என்றும் பொது மக்களையும் சமூக பெரியோர்களையும் அன்பளிப்பு செய்யுமாறு நகர சபை செயலாளரும் நூலக ஆலோசனை சபை தலைவருமாகிய திருமதி குணமணி தேவி ஆறுமுகம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-31)

# இலங்கையில் தமிழர் 131

### ராஜராஜப் பெரும்பள்ளி

தொல்லியல் திணைக்களம் 1953 இல் அகழ்வாய்வு நடத்தியபோது கவர்ச்சிகரமான பண்புடைய மிகவும் ஆர்வம் ஊட்டும் கட்டட அமைப்பு ஒன்றின் அழிபாடுகளும் கட்டடத் தொகுப்பும் வெளிப்பட்டன எனப் பரணவிதான தனதுஅறிக்கையில் எடுத்துரைத்தார்.

இக் கட்டடத் தொகுப்பில் இடம்பெற்ற ஒரு கவர்ச்சிகரமான கட்டடம் பிரதான புத்தர் சிலையை வைப்பதற்கு அமைக்கப்பட்ட படிமச்சாலை ஆகும். இக் கட்டடம் சோழர் காலத்துச் சைவக் கோயில்களின் கட்டடப் பாணியில் உள்ளது. இக் கட்டடத்தின் பண்புகள் சமகாலத்தில் அமைக்கப்பட்ட பொலநறுவை பௌத்த கட்டடங்களிலிருந்து வேறு படுபவை.

பின்னர் 1954 இல் அகழ்வாய்வு தொடர்ந்து நடத்தப்பட்டபோது, மேலும் பல கட்டிடங்களின் அழிபாடுகள் வெளிப்பட்டன. அத்துடன் பல சோழர் காலத் தமிழ்க் கல்வெட்டுக்களும் வெளிப்பட்டன. இப்பள்ளிக்குத் தானமாக வழங்கப்பட்ட ஒரு வெண்கல நந்தா விளக்கும், தானம் அளித்தவர் பெயர் பொறிக்கப்பட்டதாய்க் கண்டெடுக்கப்பட்டது.

அங்கு அகழ்ந்து எடுக்கப்பட்ட பல்வகைப் பொருட்களுள் கவனிக்கத்தக்க ஒரு பொருள் பிராமி எழுத்துப் பொறித்த ஒரு செங்கல் ஆகும். இந்த எழுத்து பொ. ஆ. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்தப் பௌத்த பள்ளி அப்பொழுதே நிறுவப்பட்டுக் காலத்துக்குக் காலம் பெருப்பிக்கப்பட்டு வந்தமைக்கு இது சான்றாகும்.

இப்பள்ளிக்கு அருகே உள்ள ஒரு பாறையிலும் இரண்டாம் நுற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டும் காணப்பட்டது. சேனைத் தலைவன் ஒருவன் வெலகம என்ற இடத்தில் இருந்த நிறுவனத்துக்கு அளித்த தானத்தை இது குறிப்பிடுகின்றது.

இங்கு காணப்படும் சோழர் கல்வெட்டுக்களுள் பெரும்பாலானவை முதலாம் ராஜேந்திர சோழன் காலத்தவை. ஏறத்தாழ பதினாறு தமிழ்க் கல்வெட்டுக்கள் இங்கு கிடைத்துள்ளன. தமிழ்ப் பௌத்தர்கள் இப்பள்ளிக்கு வழங்கிய தானங்களைப் பற்றித் தகவல் தருவதோடு, இவை இப்பள்ளியின் பழைய பெயர் வெல்கம் வேரம் என்றும் அதன் புதிய பெயர் ராஜராஜப் பெரும்பள்ளி என்றும் அறிவிக்கின்றன.

இப்பள்ளி இருந்த இடம் இரா ஜேந்திர சிங்க வளநாட்டில் வெல்காமம் என்ற ஊர் எனக் கல்வெட்டுக்கள் கூறு கின்றன.

பதினோராம் நூற்றாண்டுக்கு முன் இப்பள்ளி பிரசித்தி பெற்ற ஒரு நிறுவனமாக விளங்கியது என்று கூறச் சான்று இல்லை. ஆனால் பதினோராம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் அது சிறப்புற்று விளங்கியது. அது அக்காலத்தில் இலங்கையில் இருந்த மிகப் பரிசுத்தமான பௌத்த தலங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது.

சோழர் ஆட்சியின் போது பல சோழ அதிகாரிகளும் தமிழ்ப் பௌத்தர்களும் இந் நிறுவனத்துக்கு ஆதரவு வழங்கினர். அதன் பின் முதலாம் விஜயபாகு மன்னன் அங்கு சில திருத்த வேலைகளை நடத்தி அதற்கு ஆதரவு கொடுத்தான். பின்னர், பன்னிரண் டாம் நூற்றாண்டின் இறுதியில் நிஸ்ஸங்க மல்லன் அதற்கு ஆதரவு நல்கி னான்.

அவன் காலத்தில் இது இலங்கையின் ஐந்து தலை சிறந்த பௌத்த தலங்களுள் ஒன்றாகக் கருதப்பட்டது. நிஸ்ஸங்க மல்லன் இவ்விடத்துக்கு யாத்திரை சென்றான். பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின்னரே அதன் வீழ்ச்சி ஏற்பட்டது.

Indrapala, K. 1971, Fourteen Cola Inscriptions from the ancient Rajaraja Perumpalli (Velgam Vehera/ Natanar Kovil) at Periyakulam, Epigraphia Tamilica, I, 1: 37-51; Paranavitana, S., Archaeological Survey of Ceylon Annual Report for 1953 , Anbual Report for 1954.

*பிற்சேர்க்கை - 6*

### சைவ வெண்கலச் சிற்பங்கள்

இலங்கையில் பொலநறுவை மற்றும் அநுராதபுரம் போன்ற பழைய நகரங்களில் அகழ்வாய்வு மூலம் எடுக்கப்பட்ட பெருந்தொகையான உலோகச் சிற்பங்கள் இலங்கையின் கலைச் செல்வத்தில் சிறப்பிடம் பெறுபவை.

இலங்கை மண்ணிலிருந்து பெறப்பட்ட புத்தர், போதிசத்துவர், இந்துத் தெய்வங்கள் ஆகியோரது வெண்கலச் சிற்பங்கள் உலகத்துக்கு முன்னோர் அளித்த வரலாற்று முக்கியத்துவமுடைய பாரம்பரிய செல்வத்திலும் கலைச் சிறப்பு மிகுந்த செல்வத்திலும் சேர்த்துக் கொள்ளப்பட்ட விலை மதிக்க முடியாதா செல்வங்கள் என அறிஞர்கள் மதிப்பிடும் அளவுக்கு இலங்கையின் சைவ வைணவ விக்கிரகங்களும் பௌத்த உலோகச் சிற்பங்களும் சிறப்பு பெறுகின்றன.

இவற்றில் அடங்கும் சைவச் சிற்பங்கள் சில உலகில் உள்ள சைவ உலோகச் சிற்பங்களுள் மிக உயர்ந்த கலைப்பண்பு உடையவையாகக் கலை விமர்சகர்களால் கருதப்படுகின்றன.

இச் சைவச் சிற்பங்கள் பதினோரம் பன்னிரண்டாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. இவற்றுள் பெரும்பாலானவை 1907 இல் பொலநறுவையில் எச்.சி.பி. பெல் என்ற தொல்லியல் ஆணையாளர் நடத்திய அகழ் வாய்வின் போது கண்டெடுக்கப்பட்டவை. மேலும் சில 1908 இல் அவருடைய அகழ்வாய்வின் போது வெளிப்பட்டன.

இதன்பின் 1960 தொல்லியல் ஆணையாளர் சி.ஈ. கொடக்கும்பர நடத்திய அகழ்வாய்வு மேலும் சில சைவ விக்கிரகங்களை வெளிப்படுத்தியது. இதன் பின்னர், 1982 இலும் 1984 இலும் யுனெஸ்கோ - பண்பாட்டு முக்கோணத் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் அநுராதபுரத்திலும் சில சைவ விக்கிரகங்களை வெளிப்படுத்தின.

பழைய தலைநகர்களாகிய பொலநறுவை மற்றும் அநுராதபுரம் ஆகியவற்றுக்கு வெளியேயும் சில இடங்களில் சைவ விக்கிரகங்கள் கிடைத்துள்ளன.

இவற்றுள் பழைய கோனேஸ்வரர் கோயிலுக்குக் கிட்டிய இடத்தில் திருகோணமலையில் கிடைத்த விக்கிரகங்கள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவை.

பொலநறுவையில் கிடைத்த சைவ வெண்கலச் சிற்பங்களுள் நடராஜர் சிலைகள் கூடுதலாகக் கலை விமர்சகர்களுடைய கவனத்தை ஈர்த்துள்ளன.

இவற்றுள் மிகவும் சிறந்த சிலைகள் சில

**பேராசிரியர்**
**கா. இந்திரபாலா**

கொழும்பு அரும் பொருளகத்தில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று உலகிலுள்ள மிகப் பெரிய நடராஜர் சிலைகளுள் வைத்தெண்ணத்தக்கது. அதன் உயரம் 146.8 சென்ரிமீற்றர் ஆகும்.

கொழும்பு அரும் பொருளகத்திலுள்ள நடராஜர் சிலைகளுள் 1, 2, 15 என்ற இலக்கங்கள் இடப்பட்ட மூன்று சிலைகள் உலகிலுள்ள நடராஜர் சிலைகளுள் (பல ஐரோப்பிய, அமெரிக்க அரும் பொருளகங்கள் பலவற்றில்உள்ளஎழில்மிகு சிலைகளாகப்பலவிமர்சகர்கள் மதிப்பிட்டுள்ளனர். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை 49

அமெரிக்காவின் மிகவும் ஒதுக்கப்பட்ட நகரம் சிக்காக்கோ. ஹறோல்டு வரிங்டன் என்ற கறுப்பினத்தவர் ஒருவர் அண்மையில் தான் சிக்காக்கோவின் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்றாலும் வெள்ளையர்களின் எதிர்ப்பு பலமாக அவருக்கு உண்டு என்று பதில் தந்தார் ஒபாமா.

ஆக ஒபாமா ஹறோல்டுவின் வாழ்க்கையை கூர்ந்து அவதானித்து வருகிறார் போலிருக்கிறது. ஆயினும் ஒபாமா ஏன் அங்கே போய் தேர்தலில் அவருக்காக உழைக்கவில்லை என்பது கொவ்மனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒபாமா வரிங்டனுக்காக பரப்புரை செய்ய எண்ணி அவருக்கு கடிதம் எழுதியிருந்தார். ஆனால் அவரின் அலுவலகம் அது பற்றி பதில் தரவில்லை.

மார்ட்டி கொவ்மன் 'இளைஞர்' கறுப் பினத்தவர், சமூக ஆர்வலர் என்ற தகுதிகள் உம்மிடம் இருக்கின்றன. ஒரு சக்தி வாய்ந்த போசகரை உனது அரசியல் வாழ்வுக்கு ஆதரவு தரக் கூடியவரை நீ தேர்ந்து எடுத்து அவருடன் அரசியல் பிரசாரத்தில் வேலை செய்ய வேண்டும். ஹறோல்டு! அவர் மிகப் பலம் வாய்ந்தவர். அவரிடம் நிறைய வசீகரம் உண்டு. அவருக்கு கறுப்பின மக்களின் முழு ஆதரவும் இருக்கிறது. மேலும் இலத்தின் அமெரிக்க மக்களின் அரைப்பங்கினரும் முற்போக்கு வாதிகளான வெள்ளையர்களில் சிலரும் அவர் பக்கம் நிற்கின்றனர். ஆனால் நீ கூறியது போல அந்த நகரம் இரண்டு பட்டுக் கிடக்கிறது. எதும் அங்கே நிகழ்வதாகத் தெரியவில்லை என்று கூறி முடித்தார்.

''நகரம் இரண்டு பட்டது யாருடைய குற்றம்?'' என்று கேட்டார் ஒபாமா.

''பிரச்சினை அதுவல்ல. ஹறோல்டு போன்ற அரசியல்வாதிகள் அந்த இரண்டு பட்டதன்மையை தகர்த்தெறிய கூடிய முயற்சி எடுக்க வேண்டும். வெள்ளை - கறுப்பு என்று இருப் பதுதான் அரசியல்வாதி வளர நல்ல சந்தர்ப்பம்'' என்று முடித்தார் கொவ்மன்.

அவர் ஒபாமாவுக்கு மாதம்ச் சம்பளமாக பத்தாயிரம் டொலர் தர சம்மதித்தார். இதனுடன்



இரண்டாயிரம் பயணச் செலவும் கிடைக்கும். எல்லாம் நல்லாக நடந்தால் அவர் சம்பளத்தை வருடம் வருடம் அதிகரிப்பார். வேலையை ஏற்றுக் கொண்டு தனது காரில் சிக்காக் கோவை நோக்கி பயணித்தார் ஒபாமா.

ஒபாமா தனது பதினொராவது பிறந்த நாளுக்கு முன் சிக்காக்கோ சென்றிருந்தார். தந்தை வந்து போனபின் பாட்டி தன் பேரன் அமெரிக்காவைச் சுற்றி பார்க்க வேண்டிய தன் முக்கியத்துவத்தையுணர்ந்தாள் போலும். தான் பிறந்த தன் முன்னோர் அளித்த அரும் செல்வமாகிய வளம் செறிந்த நாட்டை காட்ட விரும்பி ஒரு மாத கால சுற்றுப் பயணத்தை மேற் கொண்டாள்.

ஒபாமாவின் தாய், பாட்டி, மாயா, ஒபாமா என்று குடும்பமாகப் புறப்பட்டனர். ஆனால் தாத்தா இதில் சேர்ந்து கொள்ளவில்லை. வயோதிபம் காரணமாக அவர் பின்தங்கி விட்டார். பயணிகள் சியாட்டிளுக்கு பறந்து சென்றனர். அங்கிருந்து கரையோரமாக பயணித்து கலிபோர்னியா, பின்லாந்து, கிறானட், கனியன், கன்ஸாஸ் நகரம் ஆகியவற்றை கண்டு களித்து கடைசியாக சிக்காக்கோ நக ரத்தைச் சேர்ந் தனர். அங்கு மூன்று நாட்கள் சுற்றிப் பார்த்தனர்.

இது நிகழ்ந்து பதினான்கு வருடங்களுக்குப் பின் மீண்டும் சிக்காக்கோ சென்றுள்ளார். மார்ட்டி கோவ்மனின் அழைப்பின் பேரில் தான் வேலை தேடி அங்கு சென்றார். இரண்டு நாட்கள் கொவ்மன் அவசர வேலையில் ஈடுபட்டிருந்ததால் தன்னை அதன் பின் சந்திக்குமாறு பணித்திருந்தார். ஆகவே ஒபாமா நகரத்தின் வரை படம் ஒன்றை வாங்கி அதன் உதவியுடன் நகரத் தைச் சுற்றிப் பார்த்தார். மூன்று நாட்கள் சிக் காக்கோ நகரம் முழுவதையும் சுற்றினார். மூன்றாம் நாள் போகும் வழியில் சிகையலங்காரக் கடை ஒன்றைக் கண்டு உள்ளே நுழைந்த போது வாடிக்கையாளர்களின் கலகலப்போடு வாசனைப் பொருட்களின் மணமும் கலந்து மூக்கையும் காதையும் ஆக்கிரமித்தன.

**ஐம்பொன்**

சிமிற்றி என்பது கடைக்காரனின் பெயர் . அவன் கறுப்பன். வயோதிபன் . முதுகு வளைந்துள்ளது... அவனுக்கு முன்னா லுள்ள கதிரை காலியாக இருந்தது. ஆகவே அதில் அமர்ந்து கொண்டார். சிகையலங் காரக் கடைகளில் வழக்கமாக நடக்கும் சம்பாஷணைகள், வேடிக்கைப் பேச்சுகள், விகட கவிகளின் விடம்பங்கள்,குசுகுசுப்புகள், பத்திரிகை செய்திகளை அலசுதல் ஆகியவற்றால் கடை களை கட்டியிருந்தது.

வாடிக்கையாளர்கள் தங்கள் தங்கள் கவலைகளையெல்லாம் மூட்டை கட்டி விட்டு அந்த குறுகிய நேரத்திலாவது சொர்க்க புரியில் சஞ்சரிக் கும்பிரமையில் ஆழ்ந்திருந்தன.

(தொடரும்)

BOC
லங்கா பேங்குவ இலங்கை வங்கி

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்தும்

# கௌரவிப்பு விழா -01.05.2009

## கௌரவம் பெறும் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை க.பொ.த(உ/த) 2008 மாணவர்களின் பெயர் விபரம்

### நெல்லியடி மகா வித்தியாலயம்

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | செ.செல்வரூபன் | வர்த்தகம் | 3 A |
| 02 | சூ.சத்தியவாணி | கலை | 3 A |
| 03 | வி.விமலகுமார் | கலை | 3 A |
| 04 | இ.சுதீபன் | கலை | 3 A |
| 05 | பே.புஸ்பலதா | கலை | 3 A |
| 06 | இ.ராஜ்குமார் | கணிதம் | 2A, B |
| 07 | த.நிரோஜலா | வர்த்தகம் | 2A, B |
| 08 | மா.நிரோஜன் | வர்த்தகம் | 2A, B |
| 09 | ஜெ.கீர்த்தனன் | கலை | 2A, B |
| 10 | சி.தடசயன் | கலை | 2A, B |
| 11 | தி.சுபோஷன் | கலை | 3 A |
| 12 | ஜெ.அபிரா | கலை | 2A, B |
| 13 | தி.ஜெயராம் | கலை | 2A, B |
| 14 | க.ஐங்கரன் | கலை | 2A, B |
| 15 | ச.அருள்ராணி | கலை | 2A, B |
| 16 | ந.செந்தாழன் | கலை | 2A, B |
| 17 | எஸ்.இரகுதாஸ் | கலை | 2A, B |
| 18 | அ.சியாமளன் | கலை | 2A, B |
| 19 | சோ.மைதிலி | கலை | 2A, B |
| 20 | சி.சுரேஸ் | கலை | 2A, B |
| 21 | அ.ஜெயதீபன் | கலை | 2A, B |

### வேலாயுதம் மகாவித்தியாலயம்

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | ஜெ.பிரபாகரன் | கலை | 3A |
| 02 | து.திருமகள் | வர்த்தகம் | 3A |
| 03 | இ.பிரதீபன் | கலை | 2A, B |
| 04 | வெ.குணசீலன் | கலை | 2A, B |
| 05 | த.பிரகலாதன் | கலை | 2A, B |

### வல்லை மகாவித்தியாலயம்

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | த. ஜீவிதா | கலை | 2A, B |

### க.பொ.த. உயர்தரம் (2008) "3A", "2AB சித்தி பெற்ற வடமராட்சி வலய மாணவர்களுக்கான கௌரவிப்பு

இடம் : நெல்லைமுருகன் திருமண மண்டபம், நெல்லியடி
காலம் : 01.05.2009
நேரம் : காலை 8.30 மணி
**தலைமை :** திரு ந.சிவரட்ணம்
*(உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி,வட பிராந்தியம்)*

**வரவேற்புரை : திரு.க.சகாதேவன்**
*(முகாமையாளர், இலங்கை வங்கி, நெல்லியடி)*

**ஆசியுரை : திரு.சி. சத்தியசீலன்**
*(பிரதேச செயலர், கரவெட்டி)*

**சிறப்புரை : திரு.இ.வரதீஸ்வரன்**
*(பிரதேச செயலர், பருத்தித்துறை)*

**கருத்துரைகள்:**

**திரு வி.செல்வராஜா**
*(வலயக்கல்விப் பணிப்பாளர்,வடமராட்சி)*

**திரு வே.தி.செல்வரட்ணம்**
*(மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம்)*

**திரு.க.திருமாலழகன்**
*(ஆலோசகர் , வலம்புரி நாளிதழ்)*

**திரு.ஆர்.ஜெயேந்திரா**
*(செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி , வடபிராந்தியம்)*

**திரு.கே. உலகநாதன்**
*(ஓய்வு பெற்ற செயற்பாட்டு முகாமையாளர், இலங்கை வங்கி, வடபிராந்தியம்)*

**திரு.கே. பாலசுப்பிரமணியம்**
*(ஓய்வு உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி , வடபிராந்தியம்)*

விரிவுரை : **"Career Development"**
**திரு.எம்.சின்னத்தம்பி**
*(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.பல்கலைக்கழகம்)*

***சான்றிதழ் மற்றும் அடையாளப் பரிசு வழங்கல்***

**நன்றியுரை : திருமதி.எஸ்.பிரபாகரன்**
*(முகாமையாளர் இலங்கை வங்கி, பருத்தித்துறை)*

கௌரவிக்கப்படும் மாணவர்கள் தமது பாடசாலை அதிபர்களுடன் சீருடையில் சமுகம் தருவது சிறப்பானது.

### பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | அ.திவ்யா | கலை | 3 A |
| 02 | ஸ்ரீ.ஜனனி | கலை | 3 A |
| 03 | அ.விஷ்ணுவர்த்தனி | கலை | 3 A |
| 04 | வி.வானதி | கலை | 3 A |
| 05 | அ.மயூரின்சயினா | கலை | 3 A |
| 06 | பா.காயத்திரி | கலை | 3 A |
| 07 | செ.அனுசா | கலை | 3 A |
| 08 | யோ.யோகானந்தி | கலை | 3 A |
| 09 | அ.மேரிதர்சிகா | கலை | 3 A |
| 10 | இ.நர்மதா | கலை | 3 A |
| 11 | தி.கம்சா | வர்த்தகம் | 3 A |
| 12 | ப. மதுரா | கலை | 2A, B |
| 13 | ஞா.வாகினி | கலை | 2A, B |
| 14 | ச.யாழினி | கலை | 2A, B |
| 15 | சி.சுமதி | கலை | 2A, B |
| 16 | பா.ஜனார்த்தனி | கலை | 2A, B |
| 17 | சி.சங்கீதா | கலை | 2A, B |
| 18 | ச.நிலாயினி | கலை | 2A, B |
| 19 | த.லாவண்யா | கலை | 2A, B |
| 20 | யோ.மேரிநிசாந்தினி | கலை | 2A, B |
| 21 | த.யசிக்கா | கலை | 2A, B |
| 22 | ஜீ.ஆர்த்தி | கலை | 2A, B |
| 23 | ம.மேரிசுகந்தினி | கலை | 2A, B |
| 24 | இ.கலையரசி | வர்த்தகம் | 2A, B |
| 25 | சி.பாகினி | விஞ்ஞானம் | 2A, B |

### அம்பன் அ.த.க.பாடசாலை

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | லோ.சுலோசனா | கலை | 3A |
| 02 | சி.குபிதா | கலை | 3A |
| 03 | த.இராசகுமாரி | கலை | 2A, B |
| 04 | ச.கபில்ராம் | கலை | 2A, B |

### உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | சி.சேயந்தன் | கணிதம் | 3A |
| 02 | கு.மனோரூபினி | கலை | 3A |
| 03 | யோ.நீரோஜனா | கலை | 3A |
| 04 | வ.ரதீனா | கலை | 3A |
| 05 | த.தாரணி | கலை | 3A |
| 06 | பே.கிரிஷாந் | கலை | 3A |
| 07 | மோ.கஜன் | கலை | 3A |
| 08 | பா.கிருஷ்ணா | கலை | 3A |
| 09 | செ.ஸ்ரீநிஷாந் | கலை | 3A |
| 10 | து.தயாதர்சன் | கலை | 3A |
| 11 | இ.மாஹரன் | கணிதம் | 2A, B |
| 12 | இ.கோபிராகவன் | கணிதம் | 2A, B |
| 13 | பா.பிரகலாதன் | உயிரியல் | A, 2B |
| 14 | சி.அன்பரசி | கலை | 2A, B |
| 15 | து.ஜனரஞ்சனி | கலை | 2A, B |
| 16 | சி.கமலதர்சன் | கலை | 2A, B |
| 17 | து.வினோத் | கலை | 2A, B |

### வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | எஸ். கலைச்செல்வி | கலை | 3A |
| 02 | எஸ். பிறமிலா | கலை | 3A |
| 03 | ஆர். பிரவீனா | கலை | 3A |
| 04 | ரி. ராஜநந்தினி | கலை | 3A |
| 05 | கே. வனஜா | கலை | 3A |
| 06 | ஆர். விஜிதா | கலை | 3A |
| 07 | ஏ. கார்த்திகா | கலை | 2A, B |
| 08 | எம். காயத்திரி | கலை | 2A, B |
| 09 | பி. கஸ்தூரி | கலை | 2A, B |
| 10 | எஸ். மிதுலா | கலை | 2A, B |
| 11 | ரி. நிசாந்தினி | கலை | 2A, B |
| 12 | எஸ். ரோகினி | கலை | 2A, B |
| 13 | எஸ். துவாரகா | கலை | 2A, B |
| 14 | எஸ். விதுசா | கலை | 2A, B |
| 15 | கே. வானதி | கலை | 2A, B |
| 16 | ஜெ. உமையாவாள் | கலை | 2A, B |
| 17 | கே. அர்ச்சனா | கலை | 2A, B |
| 18 | ஜி. கௌஷிகா | வர்த்தகம் | 3A |
| 19 | கே. கோபியா | வர்த்தகம் | 2A, B |

### பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | த.முகுந்தன் | கணிதம் | 3A |
| 02 | இ.ஹரீசன் | கணிதம் | 3A |
| 03 | சி.சத்தியவரதன் | கணிதம் | 3A |
| 04 | ம.செந்தூரன் | கணிதம் | 3A |
| 05 | க.சுதர்சன் | கலை | 3A |
| 06 | ஸ்ரீ.ஜெயந்திகுமார் | கலை | 2A, B |
| 07 | கி.அம்புஜன் | கலை | 2A, B |
| 08 | ஜெ.துஷாந்தன் | கலை | 2A, B |
| 09 | க.வாகீசன் | கணிதம் | 2A, B |
| 10 | இ.ரஜீவன் | கணிதம் | 2A, B |
| 11 | ச.ஹரிதரன் | கணிதம் | 2A, B |
| 12 | பு.விஜிதரன் | கணிதம் | 2A, B |
| 13 | ஜெ.பூங்குன்றன் | உயிரியல் | 2A, B |
| 14 | லோ.நாகராஜா | வர்த்தகம் | 2A, B |
| 15 | எஸ். நிரோசன் | கலை | 2A, B |
| 16 | எஸ். பிரசாந்தன் | கலை | 2A, B |

### கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | அ.அன்யூலியற் | கலை | 3A |
| 02 | இ.பிறேமிலா | கலை | 3A |
| 03 | க.தனேஸ்வரன் | கலை | 3A |
| 04 | பா.நிறோஜன் | கலை | 2A, B |
| 05 | பா.யூடிற்பாமினி | கலை | 2A, B |
| 06 | இ.விஜயதர்சினி | கலை | 2A, B |
| 07 | ச.ஜீவிதா | கலை | 2A, B |
| 08 | சி.மயூரன் | கலை | 2A, B |
| 09 | தி.எழிலரசி | கலை | 2A, B |
| 10 | யே.றதீசியா | கலை | 2A, B |
| 11 | அ.மேரிவினித்தா | கலை | 2A, B |

### புற்றளை மகாவித்தியாலயம்

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | இ.கிருஷ்ணப்பிரியா | கலை | 3A |

### வட இந்து மகளிர் கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | கு.நிரூஜா | கலை | 3A |
| 02 | ப.தர்சிகா | கலை | 3A |
| 03 | கு.நிருபா | கலை | 3A |
| 04 | கௌ.காயத்திரி | கலை | 3A |
| 05 | ம.கிசோதனா | கலை | 3A |
| 06 | ம.துவாரகா | கலை | 2A, B |
| 07 | இ.கலைவாணி | கலை | 2A, B |
| 08 | பா.ஜனனி | கலை | 2A, B |
| 09 | உ.உமா | கலை | 2A, B |
| 10 | மா.கார்த்திகா | கலை | 2A, B |
| 11 | பொ.ஞானகலை | கலை | 2A, B |
| 12 | சி.கரையரசி | கலை | 2A, B |
| 13 | கி.உதயராணி | கலை | 2A, B |
| 14 | க.சுகிதா | கலை | 2A, B |
| 15 | கு.ராதிகா | கலை | 2A, B |
| 16 | சி.பிருந்தா | கலை | 2A, B |
| 17 | சி.வைஷ்ணவி | வர்த்தகம் | 2A, B |
| 18 | செ.பிரதீபா | வர்த்தகம் | 2A,B |
| 19 | எஸ். ஆரணி | கலை | 3A |
| 20 | கே.எஸ்.கீதாஞ்சலி | கலை | 3A |
| 21 | எஸ். கார்த்திகா | கலை | 3A |

### உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | எஸ். சுபோதினி | கலை | 3A |
| 02 | எம். துவாரகா | கலை | 3A |
| 03 | ஆர். யாழினி | கலை | 2A, B |
| 04 | ரி. ஜீவிதா | கலை | 2A, B |
| 05 | கே. நிருபா | கலை | 2A, B |
| 06 | எஸ். திவ்வியவானதி | கலை | 2A, B |

### தேவரையாளி இந்துக்கல்லூரி

| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | எம். சுரேந்தர் | கலை | 3A |
| 02 | ஏ. விமல்ராஜ் | கலை | 3A |
| 03 | எஸ். கௌதமி | கலை | 2A, B |
| 04 | ஆர். சுவரேகா | கலை | 2A, B |
| 05 | எஸ். விஜிதா | கலை | 2A, B |

### உடுப்பிட்டி ஞானரசாரியார் பாடசாலை


| தொ.இ. | பெயர் | பிரிவு | பெறுபேறு |
|---|---|---|---|
| 01 | எஸ். நவேதா | கலை | 3A |
| 02 | ஏ. சுதர்சினி | கலை | 2A, B |
| 03 | எஸ். உஷா | வர்த்தகம் | 2A, B |

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற யாழ்.கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -26.04.2009

## வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை










அன்பார்ந்த மாணவர்களே உங்கள் கௌரவிப்பு விழா படங்கள் தொடர்ந்து வலம்புரியில் வெளிவரும்.

# இந்திய தூதர்களின் விஜயத்தின் பின்னரே தமிழர்கள் மீதான தாக்குதல் அதிகரிப்பு

## வைகோ தெரிவிப்பு



(உதகை)

இலங்கைக்கு இந்திய தூதர்கள் சென்று வந்த பின்னரே தமிழர்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது என்று ம.தி.மு.க பொதுச்செயலர் வைகோ கூறியுள்ளார்.

உதகையில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர் கூறியதாவது,

இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தம் செய்ய வேண்டுமென தெரிவித்த அமெரிக்க அதிபர் ஒபாமா போர் நிறுத்தம் செய்யப்படாவிட்டால் இலங்கையே இரண்டாகிவிடும் என எச்சரித்திருந்தார். அதேபோல் இங்கிலாந்து, ஐரோப்பிய நாடுகளின் கூட்டமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை ஆகியவையும் தொடர்ந்து வலியுறுத்தியதால் போர் நிறுத்தம் செய்ய இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறி இலங்கையில் இரசாயன குண்டுகளை பயன்படுத்தி பல்லாயிரக்கணக்கான தமிழர்களை கொன்றுவிட வேண்டுமென இலங்கை அரசு தீர்மானித்துள்ளதாக ஞாயிற்றுக்கிழமை இரவு பரவிய தகவல் கருணாநிதிக்கும் கிடைத்துள்ளது. இதனால் எப்போது வேண்டுமானாலும் போர் நிறுத்தம் அறிவிக்கப்படலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதை தெரிந்து கொண்ட கருணாநிதி இந்த போர் நிறுத்தம் தன்னால்தான் ஏற்பட்டதென்ற மாயையை உருவாக்குவதற்காகவே திடீர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார்.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தாத இந்தியு அரசு இங்கிருந்து இரண்டு தூதர்களை இலங்கைக்கு அனுப்பி போரை விரைவில் முடிவுக்கு கொண்டுவருமாறு உத்தரவிட்டது. அதன் பின்னரே தமிழர்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளதாக வரும் தகவல்கள் தவறானவை திங்கட்கிழமை கூட தமிழர்கள் வாழும் பகுதிகளில் இலங்கை இராணுவ விமானங்கள் குண்டுகளை வீசியுள்ளன.

அங்குள்ள அனைத்து தமிழின மக்களையும் அழித்துவிட்டு சிங்களவர்கள் மட்டுமே வசிக்கும் சிங்கள நாடாக மாற்றஉள்ள இலங்கை அதிபர் திட்டமிட்டுள்ளார். (ஓ-6)

# கண்துடைப்பு நாடகத்தின் உச்சக்கட்ட காட்சி

## கருணாநிதியின் உண்ணாவிரதம் குறித்து இராமதாஸ் விபரிப்பு



(சென்னை)

கருணாநிதி நடத்திய உண்ணாவிரதம் ,அவர் நடத்திய கண்துடைப்பு நாடகத்தின் உச்சக்கட்ட காட்சி என பா.ம.க. நிறுவுனர் இராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மூன்று மாதத்திற்கு முன்பாவது போரை நிறுத்தியிருந்தால் ஒரு வேளை பல்லாயிரம் ஈழத் தமிழர்களின் உயிரைக் காப்பாற்றியிருக்க முடியும். அப்போதெல்லாம் பாய்வது போல பேசுவதும் பின்னர் பதுங்குவதுமான நிலையையும் கருணாநிதி எடுத்து வந்தார்.

இலங்கை இறையாண்மைமிக்க நாடு எனவே அதன் உள் விவகாரத்தில் ஓரளவு தான் தலையிட முடியும் என பேசிக் கொண்டிருந்தார். இந்தியாவிடம் இருந்து இலங்கை அரசு அனைத்து வகையான உதவிகளையும் பெற்று ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்து போரில் வெற்றி என்று பிரகடனம் செய்து கொண்டிருக்கிறது. போரை நிறுத்துவதற்கு இனி அங்கு ஒன்றுமில்லை.

போரில் எல்லாம் முடிந்தது என்று இலங்கை அரசு அறிவித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் போரை நிறுத்த வேண்டும் என கருணாநிதி உண்ணாவிரதம் நடத்தியுள்ளார்.

இது காலம் கடந்த முடிபு இதுவரையில் கருணாநிதி நடத்திய கண்துடைப்பு நடாகத்தின் உச்சக்கட்ட காட்சி என்று தான் தமிழக மக்கள் இதை கருதுவார்கள் என இராமதாஸ் கூறியுள்ளார். (ஓ-6)

# எம்.ஜி.ஆர்.தான் தமிழின தலைவன்

## இயக்குநர் சீமான் பேச்சு

இயக்குநர்கள் சீமான், மணிவண்ணன், வி.எம்.குமார் உட்பட 10 இயக்குநர்கள் இணைந்து மாயாண்டி குடும்பத்தார் என்ற தமிழ் படத்தில் நடிக்கிறார்கள்.

இந்த படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் சென்னை ஏ.வி. எம்.ஸ்டுடியோவில் நடைபெற்றது. பாடல்களை இயக்குநர் அமீர் வெளியிட தமிழ் தேசிய பொதுவுடமை கட்சி தலைவர் மணி அரசு பெற்றுக்கொண்டார்.

சிறையில் இருந்து விடுதலையான இயக்குநர் சீமான் இந்த பட விழாவில் கலந்து கொண்டு பேசினார் அப்போது அவர்,எம்.ஜி.ஆர் தான் தமிழ் இன தலைவன். தமிழ் இனத்துக்காக பாடுபட்டவர் தமிழ் நாட்டுக்கு ஒரு எம்.ஜி.ஆர். தமிழீழத்துக்கு ஒரு பிரபாகரன். இப்படி பேசுவதால் என்னை யாரும் கைது செய்ய முடியாது கைது செய்தால் தேர்தலில் தோற்றுப் போய் விடுவார்கள் என்று பேசினார். -(ஓ-6)

அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோவில்

மஹோற்சவம்

01ஆம் நாள் கொடியேற்றத்திருவிழா

(29.04.2009)

வெண்பா

செந்தமிழ் சோலைதனில் சொரிந்திடும் சொல்மலரால்
பைந்தமிழ்ப் பாமாலை புனைந்திடவே விந்தைமிகு
வித்தகனே தமிழ்ப்பா விளையவென் சிந்தையில்
முத்தமிழாகி நிறைவாய் முதல்

எண்சீர்

ஆதிசிவன் ஓர்பாதி மாதுருவானவன்
அவனீந்த பிள்ளையிவன் கஜமுகமானவன்
ஓதியுணர் ஞானத்தின் வேதமூலமானவன்
ஓங்கார தத்துவ உட்பொருளான-வன்
தீதெனத் தொடுவினை தீய்த்திடுவானவன்
தீங்கனி தேனமுதஞ் சிந்துவாயினன்
போதனிவன் பாதமலர் பணிந்துபோற்றில்
பீடுபெறு பெருவாழ்வுப் பேறளிப்பானே!



(2566) அல்வாயூர் சி.சிவநேசன்

# சுவீடன் வெளிவிவகார அமைச்சரின் வருகைக்கு இலங்கை அரசாங்கத்தால் அனுமதி மறுப்பு

## இராஜதந்திர வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பிரித்தானியா மற்றும் பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர்கள் கொழும்பு வருவதற்கான அனுமதியை வழங்கிய இலங்கை அரசாங்கம், சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சரின் வருகைக்கு அனுமதியை வழங்க மறுத்திருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சுவீடனும் மற்றொரு சந்தர்ப்பத்தில் இருதரப்பு உறவுகள் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்து நாசூக்கான முறையில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரின் வருகையை இலங்கை வெளிவிவகார அமைச்சு தடுத்து விட்டதாகவும் இந்த வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேலிட் மிலிபான்ட், வெளிவிவகார அமைச்சர் ரோகித பொகொல்லாகமவுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தொலைபேசி மூலம் தொர்பு கொண்டு தமது வருகை தொடர்பாகப் பேசியதாகவும், அப்போதே சுவீடன் அமைச்சரின் வருகையை இலங்கை அரசாங்கம் விரும்பவில்லை என்பது அவருக்குத் தெரிவிக்கப்பட்டதாகவும் இராஜ தந்திர வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபான்ட், பிரான்ஸ், வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் கௌச்சல், மற்றும் சுவீடன் வெளிவிவகார அமைச்சர் சால்ஸ் பில்ட்ற் ஆகியோர் இலங்கைக்கான அதிகார பூர்வ பயணத்தை மேற்கொண்டு இன்று கொழும்பு வரவிருப்பதாக பிரித்தானிய பிரதமர் கோடன் பிறவுண் கடந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் நேற்று முன்தினம் தமது பயணம் தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சருடன் தொலைபேசி மூலம் விரிவான பேச்சுக்களை நடத்தினார். இதன்போதே சுவீடன் வெளிவிவகார அமைச்சரின் வருகையை தாம் விரும்பவில்லை என்பதை அமைச்சர் ரோகித போகொல்லாகம தெரியப்படுத்தியிருக்கிறார்.

சுவீடன் வெளிவிவகார அமைச்சரை கொழும்பு வருமாறு இலங்கை அரசாங்கம் அழைப்பு எதனையும் அனுப்பி வைக்கவில்லை எனத் தெரிவித்த போகொல்லாகம, சுவீடனும் கோப்பன் ஹேகனில் உள்ள இலங்கை தூதரகத்தில் இவ்வாறான விருப்பம் எதனையும் தெரிவித்திருக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இருந்த போதிலும் இவ்வாறான விண்ணப்பம் ஒன்றை சுவீடனில் உள்ள இலங்கை தூதரகத்தில் சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கையளித்ததாகவும், அதனை தூதரக அதிகாரிகள் ஏற்றுக் கொண்டதாகவும் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார். ஆனால், இவ்வாறான விண்ணப்பம் எதுவும் கிடைக்கவில்லை என போகொல்லாகம மறுத்துவிட்டதாகவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஓ-6)

# மகேஸ்வரன் எம்.பி. படுகொலை வழக்கு

## ஆகஸ்ட் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

படுகொலை செய்யப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தி. மகேஸ்வரனின் வழக்கு விசாரணை ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, வழக்கின் எதிரியும் சாட்சிகளும் ஆஜராகியிருந்தனர். வழக்கு விசாரணை ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதி நடைபெறும் எனத் தெரிவித்த நீதிபதி வழக்கினை ஒத்தி வைத்தார். (ஓ-6)

# செட்டி குளம் நலன்புரி முகாம்களுக்கு ஜோன் ஹோம்ஸ் விஜயம்

## பொதுமக்களின் குறைபாடுகளையும் கேட்டறிந்தார்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைக் குழுவின் உதவிச் செயலாளர் ஜோன் ஹோம்ஸ் நேற்று முன்தினம் வவுனியாவுக்கு விஜயம் செய்து, வன்னியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி நிலையங்களை பார்வையிட்டுள்ளதுடன், அங்குள்ள மக்களின் குறை, நிறைகளையும் கேட்டறிந்துள்ளார்.

நேற்று முன்தினம் முற்பகல் செட்டிகுளம் பகுதிக்கு விஜயம் செய்த இவர் அங்குள்ள நலன்புரி முகாம்களை பார்வையிட்டார். இவருடன் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி நீல் பூனே, சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகிபால ஹேரத், மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோரும் நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் மேற்கொண்டனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் குறைபாடுகள் குறித்து நேரடியாக ஜோன் ஹோம்ஸ் கேட்டறிந்தார். இதன்போது தமக்கு உரிய தங்குமிட வசதி மற்றும் மலசல கூட வசதிகள் இல்லையெனவும் போதியளவு உணவு வகைகள் வழங்கப்படுவதில்லை, தண்ணீர் வசதி இல்லை, பிள்ளைகள் படிக்க முடியாத நிலை காணப்படுகின்றது எனவும் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக ஜோன் ஹோம்ஸ் மக்களிடம் உறுதியளித்துள்ளார். இந்த விஜயத்தின் போது வவுனியா, கண்டி, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களின் செயலாளர்களும் கலந்து கொண்டனர். (ஓ-6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### துளசி

Botanical Name - Ocimum Sanctum
Family - Labiatae
Engl -Holy bosil
Sing - Madurutala

பெரும்பாலும் எல்லோருக்கும் தெரிந்த ஒரு சிறு செடி. சுமார். 75 செ. மீ உயரம் வரைக்கும் பல கிளைகளுடன் நன்கு படர்ந்து வளரும். தண்டுகள் உறுதியானவை. இலை, காம்பு, தண்டு ஆகியவற்றில் மிக மெல்லிய சுணைகள் உண்டு. ஆனால் இவைகள் இருப்பதே தெரியாது. மென்மையான இதன் இலை சிறிது நீண்ட விருத்த வடிவமாகவும், 2 முதல் 4 செ.மீ நீளமும், 1 முதல் 2 செ.மீ அகலமும் உள்ளது. இலை ஓரங்களில் மிக லேசான சில பிளவுகளைக் காணலாம். மங்கலான வெண்ணிறப் பூக்கள் சிறியன. மகரந்தக் காம்பு சிறிது செம்மை கலந்த கருமை நிறமுடையது. நான்கு சிறிய இதழ்கள் ஒரு பக்கமாகவும் மற்றொரு பக்கத்தில் இதழே இல்லாமலுமிருக்கின்றன. மிக நுண்ணிய கபில நிறமுடைய விதைகள் உறுதியற்று கூடுபோல இருக்கும். நீரில் நன்கு ஊறிய விதைகள் குழுகுழுப்புடையன. இது பல ஆண்டுகள் வரை உயிருடனிருக்கும்.

### இனவிருத்தியும், பரம்பலும்

தானாக தரிசு நிலங்களில் முளைத்து வளரும். சில இடங்களில் காடாக மண்டி வளருவதைக் காணலாம். கோவில்களில் பூசைக்காகப் பயிரிட்டு வளர்க்கிறார்கள். எல்லாவகை மண்களிலும் வளரும். விதைகளைத் தூவியும், தானாக முளைத்துள்ள சிறு கன்றுகளை மீற்றருக்கு ஒன்றாக வைத்தும் வளர்க்கலாம். பாத்திகளில் வளர்க்க ஏற்றது. ஆண்டு முழுவதும் எந்தப் பருவத்திலும் எளிதாகக் கிடைக்கும்.

### மருத்துவப் பயன்கள்.

◆ துளசியை சிறுகச் சிறுகக் கிள்ளிப் போட்டு ஒரு டம்ளர் தண்ணீரில் ஐந்தாறு மணி நேரம் ஊறவைத்து பிறகு அந்தத் தண்ணீரை மாத்திரம் அருந்தினால் உடலில் நோய்கள் அணுகாது. குறைந்த பட்சம் 6 வாரங்கள் அருந்த வேண்டும்.

◆ ஐந்தாறு துளசி இலைகளை கொண்டு வந்து, அத்துடன் சிறு இஞ்சித் துண்டையும் சேர்த்து நன்றாய் மென்று விழுங்கி உடனே வெந்நீர் அருந்த சளி, மூக்கால் நீர் வடிதல் குணமாகும்.

◆ துளசியுடன் ஒரு சிறுதுண்டு சுக்கையும், இரண்டு கராம்பையும் வைத்து நன்றாக அரைத்து நெற்றியில் பற்றுப் போட தலைவலி தணியும்.

◆ துளசி இலையும், வில்வ இலையும் சம அளவு எடுத்து இடித்துச் சாறு எடுத்து கிடைக்கும் சாறுக்கு இரட்டிப்பு அளவுக்கு நல்லெண்ணெயைக் காய்ச்சி அதில் இந்த சாற்றையும் ஊற்றி, மீண்டும் நன்றாகக் காய்ச்சி இறக்க வேண்டும். இலைச்சாறு நன்றாக வெந்து சிவந்து மணல்போல எண்ணெயின் அடியில் தங்கி விட்டால் தைலம் பதமாகி விட்டதென இறக்கவும். அத்தைலத்தை வடிகட்டி எடுத்து உள்நாக்கு வளர்ந்திருந்தாலும், டான்சிக் வளர்ந்திருந்தாலும் இத்தைலத்தை தலைக்கும் வைத்து, தொண்டையிலும் பூச நல்ல பயனைத்தரும்.

இதில் அரைத் தேக்கரண்டியளவு எடுத்து வாயிலிட்டு இலேசாக தொண்டை வரை தைலம் போய் வரும்படியாகக் கொப்பளிக்க வேண்டும்.

தைலம் தயாரிக்கும் போது, நல்லெண்ணெய்க்குப் பதில் தேங்காய் எண்ணெய் விட்டு தயாரித்தால், நாள் தோறும் தலையில் தடவிக் கொள்ள தலைமுடி நன்றாக கரு கருவென்று வளருவதுடன், அடிக்கடி ஜலரோகம் ஏற்படாது. மூக்கடைப்பு வராது.



◆ தோலில் ஆங்காங்கு படைகள் காணப்பட்டு அரிப்பும் இருந்தால் முதலில் அப்படையை சுத்தம் செய்து பிறகு துளசிச் சாற்றுடன் வெற்றிலைச் சாற்றையும் கலந்து தடவி வர வேண்டும்.

### துளசி சர்பத்

துளசிச் சாறு 200 மில்லி எடுத்து சம அளவு தண்ணீரில் கலந்து அடுப்பிலேற்றி, சற்று சூடானவுடனே 500 கிராம் சீனியையும் அதில் கொட்டிக் கலக்கிக் காய்ச்சி பாகுபதம் வந்ததும் இறக்கி ஆறவைத்து சீசாவில் பத்திரப்படுத்தவும். இத் துளசி சர்பத்தில் காலை, மாலை ஒரு தேக்கரண்டியளவு சாப்பிட்டு வந்தால் தேகத்தில் பலம் ஏறும், இரத்தம் விருத்தியாவதுடன், சுத்தமுமாகும். கண்பார்வை தெளிவடைந்து அறிவு வளர்ச்சியும் மென்மையுறும்.

◆ கோப்பிக்குப் பதிலாக துளசியிலைகளை தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி, பாலும், சீனியும் கலந்து சாப்பிட்டால் உடலுக்கு வலுவைக் கொடுக்கும். நோயைத் தடுத்து தேக புஷ்டியை உண்டாக்கும்.

◆ தலையில் பேன் பிடித்துவிட்டால் நிறைய துளசி இலைகளை தலையணையின் மீது பரப்பி, அதன்மேல் ஒரு மெல்லிய துணியை விரித்து படுத்துவிட வேண்டும்.

◆ சில ஆண்களுக்கு இரவில் தூக்கத்தில் இந்திரியம் தானே வெளியாகிவிடும். இதற்கு துளசி விதைகளை தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் காலையில் அதை எடுத்து அரைத்து பசுப்பாலில் கலந்து காலையில் வெறும் வயிற்றில் கொடுக்கவும். இவ்வாறு ஒரு வாரம் கொடுக்கவும். அத் தொல்லை தீரும்.

◆ இருதய பலவீனமுடையவர்கள், இருபது சொட்டு தேனுடன், 7 சொட்டு துளசிச் சாறு விட்டு, சிறிது நீரும் கலந்து உள்ளுக்கு கொடுக்கவும். காலை, மாலை ஆறு வாரங்கள் சாப்பிட குணம் கிடைக்கும்.

◆ காய்ச்சல் வரும் குறி, குணம் தெரிந்தால் உடனே துளசியுடன் கொஞ்சம் சுக்கையும் தட்டிப் போட்டு கசாயம் வைத்துக் குடிக்கவும்.

◆ குழந்தைகள் என்றாலும் சரி பெரியவர்கள் ஆனாலும் சரி சிலருக்கு பசுப்பால் குடித்தால் சளித் தொல்லை அதிகரிப்பதாக கூறுவார்கள். அப்படியானவர்கள் பசுப்பாலைக் காய்ச்சும் போது ஐந்தாறு கருத்துளசி இலைகளையும், 4,5 மிளகும் சேர்த்து காய்ச்சி பருகி வந்தால் பசுப்பாலால் சளித்தொல்லை ஏற்படாது. நல்ல ஊட்டச்சத்தும் கிடைக்கும்.

◆ கருந்துளசியிலையைக் கொண்டு வந்து சுத்தம் செய்து உள்ளங்கையில் வைத்து கசக்கிப் பிழிந்து சாறு எடுத்து அதை சிறிதளவு குழந்தைகட்கு கொடுத்து வந்தால் அஜீரணம், அஜீரண வயிற்றுப் போக்கு குணமாகும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

**குறிப்பு:** துளசி வகைகளில் வெண்துளசி, எலுமிச்சம்துளசி, நாய்த்துளசி, கல்துளசி எனப் பல வகைகள் யாழ்மாவட்டத்தில் பரந்து காணப்பட்டாலும், கருந்துளசி எனும் விஷ்ணு துளசியானது மருத்துவ குணம் அதிகமுள்ளது. இதில் இலை, காம்பு, பூங்கொத்து யாவும் சிறிது சிவப்புக் கலந்த கருமை நிறம் கொண்டுள்ளதாகும். ■■■

# டயலொக் ஊடாக துரித குறுந்தகவல் சேவை!

## அரசாங்க தகவல் திணைக்களம் நடவடிக்கை

அரசாங்க தகவல் திணைக்களம் டயலொக் டெலிகொம் நிறுவனத்துடன் இணைந்து துரித குறுந்தகவல் சேவையொன்றை வழங்கவுள்ளது.

இது தொடர்பான அங்குரார்ப்பண வைபவம் கடந்த திங்கட்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன் போது இச் சேவை தொடர்பான ஒப்பந்தங்களும் கைச் சாத்திடப்பட்டன.

இவ் வைபவத்தில் தகவல் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா, அமைச்சின் செயலாளர் ஏ. திசாநாயக்க, தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் அனுஷ, பெல்பிட்ட மற்றும் டயலொக் டெலி கொம் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு தலைமை அதிகாரி நுசாட் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

டயலொக் தொலை பேசி வாடிக்கையாளர்களுக்கு எதிர் வரும் ஜூலை மாதம் 14 ஆம் திகதி வரை இலவசமாக வழங்கப் படவுள்ள இந்த துரித குறுந்தகவல் சேவையை, ''இன்போ, என ஆங்கிலத்தில் குறிப்பிட்டு 678 எனும் இலக்கத்துக்கு எஸ்.எம்.எஸ் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியுமென அறி விக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

வலிமையின்மை அதிகமாகும்போது பொய்யும் அதிகமாகும். வலிமை நேர் வழியில் செல்லும். வலிமையில்லாதவர் பொய் சொல்லாமல் இருக்க முடியாது. *~ ரிக்டர்*

வலம்புரி

## யுத்த நிறுத்தம் இல்லை - இலங்கை யுத்த நிறுத்தம் அமுல் - இந்தியா

வன்னிப் போருக்கு இன்னமும் முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லை. யுத்தத்தை நிறுத்தத் தீர்மானம், ஆனால் போர் நிறுத்தம் இல்லை என இலங்கை அரசு கூறியுள்ளது.

அரசின் அறிவிப்பிற்குப் பொருள் தேடுவதென்றால் அது முடியாத காரியம்.

யுத்தத்தை நிறுத்த முடியாதென இலங்கை அரசு கூறும்போது, இந்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் இலங்கை அரசு யுத்தத்தை நிறுத்தியுள்ளதென அறிவிக்கின்றார்.

அமைச்சர் சிதம்பரத்தின் இந்த அறிவிப்பு உலக நாடுகளில் தவறான செய்தியைப் பரப்பியுள்ளது.

அதாவது, இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டுவிட்டதென்ற கருத்தை அது உறுதி செய்வதாக இருப்பதால், இலங்கையில் யுத்தம் நின்றுவிட்டதென்ற முடிபை சர்வதேச சமூகம் எடுப்பதற்கும், யுத்தத்தை நிறுத்துங்கள் என்ற அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுப்பதை நிறுத்துவதற்கும் வகை செய்யும்.

ஆக, யுத்தம் நிறுத்தப்படமாட்டாதென இலங்கை அரசு பகிரங்கமாகக் கூறும்போது அமைச்சர் சிதம்பரம் அவசர அவசரமாக இலங்கையில் யுத்தம் நிறுத்தப்பட்டுவிட்டதென்ற அறிவிப்பை விடுத்தமையானது இலங்கை மீது ஐ.நாவினதும், அமெரிக்காவினதும் பார்வையை தணிய வைப்பதற்காகும் என்ற உண்மை உணர்தற்குரியது.

அமைச்சர் சிதம்பரத்தின் இந்தக் கபடத்தனம் சந்தர்ப்பவசமானதல்ல. அது திட்டமிட்ட துரோகத்தனம். ஏற்கனவே இலங்கைக்கு வருகை தந்த இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சிவ்சங்கர் மேனனும், பாதுகாப்பு ஆலோசகர் நாராயணனும் யுத்த நிறுத்தம்பற்றி எதுவுமே பேசவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் செயலாளரும் தெளிவாகக் கூறியபோது அமைச்சர் சிதம்பரம் மட்டும் இரண்டு இந்திய இராஜதந்திரிகளும் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்திக் கூறியுள்ளனர். இன்னும் சில நாட்கள் பொறுத்திருந்து பார்ப் போம் எனக் கூறினார்.

உண்மையில் சிவ்சங்கர் மேனனும், நாராயனும் யுத்த நிறுத்தம் பற்றி பேசியிருப்பார்களாயின் அதனை வலியுறுத்தியிருப்பார்களாயின், யுத்த நிறுத்தம் பற்றி எதுவுமே பேசவில்லை என்ற இலங்கை அரசின் அறிக்கையை கண்டித்திருக்க வேண்டுமல்லவா? அதை ஏன் அவர்கள் செய்யவில்லை?

எல்லாமே திருக்கூத்து. அதில் சிதம்பரமும் கூத்தாடுகிறார் அவ்வளவுதான்.

# உயிரை உருக்கி உண்ணா நிலை போராட்டம் செய்யும் பரமேஸ்வரன்

(லண்டன்)

பிரித்தானிய் நாடாளுமன்ற சதுக்கத்தில் கடந்த 3 வாரங்களாக தமிழ் மக்களுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டுமென கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழ் மக்கள் நேற்று அதிகாலை 6 மணியளவில் பரமேஸ்வரனின் கூடாரத்தை சுற்றி பெரும் திரளாக கூடி தங்கள் கவனயீர்ப்பு போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

விடாத மழையிலும் மக்கள் தன்னெழுச்சியுடன் கோசங்களை முழக்கம் இட்டவாறு தங்கள் போராட்டத்தை தொடர்ந்த வண்ணம் உள்ளனர். 21 ஆவது நாளாக உண்ணா நிலை போராட்டத்தை மேற்கொள்ளும் பரமேஸ்வரனுக்கு இணையாக நேற்றும் 9 தாய்மார் ஒரு நாள் அடையாள உண்ணா நிலையை முன்னெடுத்தனர்.

பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் பரமேஸ்வரனை சந்தித்து செல்கின்றனர்.

மிக நீண்ட வரிசையில் காத்திருந்து பரமேஸ்வரனை பார்வையிட்ட மக்கள் பரமேஸ்வரனை தண்ணீர் அருந்தும்படி கோரிக்கை விடுத்தும் தமிழருக்கு ஒரு விடிவு காலம் அல்லது நல்ல வழி பிறக்கும் வரை தான் தன்னுடைய போராட்டத்தை கைவிட மாட்டேன் என்று தெரிவித்தார்.

முக்கியமாக அவுஸ்திரேலியா கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் பரமேஸ்வரனை தரிசித்து செல்கின்றனர்.காலை தொடங்கிய மழை இரவு 10 மணி வரை தொடர்ந்து கொட்டும் போதும் தமிழ் மக்களின் கவனயீர்ப்பு போராட்ட கோசங்கள் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. (ஓ-6)

## 'கலைமாமணி' விருதை திருப்பிக் கொடுத்தார் கவிஞர் இன்குலாப்

இலங்கைப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்காத மத்திய அரசைக் கண்டித்து தனக்கு மத்திய அரசால் வழங்கப்பட்ட பத்மஸ்ரீ பட்டத்தை திருப்பி அனுப்பினார் இயக்குநர் பாரதிராஜா இப்போது கவிஞர் இன்குலாப் தான் பெற்ற கலைமாமனி விருதை திருப்பிக்கொடுத்துள்ளார். கவிஞரும் நாடக ஆசிரியருமான பேராசிரியர் இன்குலாப் 2006ஆம் ஆண்டில் பெற்ற தமிழக அரசின் கலைமாமணி விருதை திருப்பி அனுப்பியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய மாநில அரசுகளின் செயல்களால் அதிருப்தியடைந்துள்ளதால் விருதை அரசிடமே திருப்பித் தருவதாக அவர் அறிவித்துள்ளார். இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்றும் முதலமைச்சர் கருணாநிதி காங்கிரஸ் கூட்டணியில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஓ-6)

# "வியட்னாமில் கற்ற பாடத்தை அமெரிக்காவுக்கு புகட்டுவோம்"

### அமைச்சர் சம்பிக்க ரணவக்க எச்சரிக்கை

(கொழும்பு)

எமது பிரச்சினையில் அத்து மீறித் தலையிட்டு பிரபாகரனைப் பாதுகாப்பதற்கு முற்பட்டால் வியட்நாமில் கற்ற பாடத்தை அமெரிக்காவுக்கு புகட்டுவோம் என இலங்கை யில் உள்ள ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அரசியல் ஆலோசகரும் சுற்றாடல்துறை அமைச்சருமான சம்பிக்க ரணவக்க கடுமையாக எச்சரித்துள்ளார்.

கொழும்பு நூலக ஆவண கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய போதே அமைச்சர் சம்பிக்க ரணவக்க இவ்வாறு கடுமையான தொனியில் தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ,

சீனா, ரஷ்யா மற்றும் இந்தியா போன்றவை பொருளாதாரத்தில் இன்று வளர்ச்சியடைந் திருப்பதுடன் வல்லரசுகளாகவும் உயர்ந் திருக்கின்றன இந்நிலையில் பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்டு வரும் அமெரிக்காவால் தெற்காசியாவில் வாலாட்ட முடியாது. எமது பிரச்சினையில் அத்து மீறித் தலையிட்டு பிரபாகர னைப் பாது காப்பதற்கு அமெரிக்கா முனைந்தால் வியட்னாமில் கற்ற பாடத்தை அமெரிக்காவுக்கு நாம் புகட்டுவோம். அமெரிக்காவின் மிரட்டல்களுக்கு நாம் அஞ்சப் போவதில்லை. இவ்வாறு சம்பிக்க ரணவக்க தனது உரையில் தெரிவித்தார். (ஓ-6)

# பன்றிக் காய்ச்சலில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அரசாங்கம் விசேட நடவடிக்கை

மெக்ஸிகோ, ஐக்கிய அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, மற்றும் ஸ்பெயின் உட்பட உலகில் சில நாடுகளில் வேகமாகப் பரவி வரும்பன்றிக் காய்ச்சலை இலங்கைக்குள் பரவ விடாமல் தடுப்பதற்கான சகல முன்னேற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

சுகாதாரப் பராமரிப்பு போசாக்குத் துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் அறிவுறுத்தலுக்கு அமைய இந்த முன்னேற்பாடுகளை அமைச்சின் உயரதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

பல நாடுகளில் இக் காய்ச்சல் தீவிரமாக பரவி வருகின்றது.மெக்ஸிக்கோ நாட்டில் மாத்திரம் குறுகிய காலத்தில் இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் இனம் காணப்பட்டுள்ளனர்.

இதனைக் கவனத்தில் கொண்டே முன்னேற்பாடுகளை அரசாங்க சுகாதாரத் துறை அதிகாரிகள் மேற் கொண்டு வருகின்றனர். இம் மு ன்னேற்பாட்டின் ஓரங்கமாக கொழும்பு துறைமுகத்திலும், கட்டு நாயக்கா சர்வதேச விமான நிலையத்திலும் விசேட மருத்துவ பரிசோதனைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகளும் உடனடியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதே நேரம் இக் காய்ச்சலைத் தவிர்க்கும் திட்டத்தின் மற்றொரு அங்கமாக நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு விசேட வழிகாட்டல் அறிவுறுத்தல்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டதாக சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத் துறை அமைச்சின் நோய் பரவுகைத் தடுப்பு பிரிவு பணிப்பாளர் தெரிவித்தார்.

இக் காய்ச்சலுக்குரிய குணாம்சங்களைக் கொண்டிருப்பவர்கள் எவராவது இனம் காணப்படுவார்களாயின் அவர்களைத் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிக்குமாறும் இவ்வாறானவர்களின் இரத்தமாதிரிகளை உடனடியாக மருத்துவ ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இக் காய்ச்சலுக்கு உள்ளாகின்றவர்கள் மத்தியில் அதிக காய்ச்சல் , மூச் செடுப்பதில் சிரமம், தொண்டை அழற்சி, இருமல் போன்றவாறான அறிகுறிகள் தென்படலாம், இக் காய்ச்சல் சில நேரம் நியூ மோனியாவாகக் கூட வளர்ச்சி பெறலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ஓ-6)

## விண்ணப்பம் கோரல்

கட்டுநாயக்காவில் உள்ள எந்தர தொழில் நுட்பவியல் நிறுவகத்தில் *தேசிய எந்திரவியல் விஞ்ஞான டிப்ளோமா* 4 வருட பயிற்சி நெறிக்கு எந்தரவியல் சிறப்பு பயிலுனர்களை சேர்ப்பதற்கான விண்ணபப்பங்கள் தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையால் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த. ( உயர்தர) பரீட்சையில் விஞ்ஞான, எந்திரவியல் பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் 18 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யூன் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பப்படல் வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்களை 24.04.2009 இல. 1599 வர்த்தமானியிலும் WWW.ilt.edu.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரத்தையும் விண்ணப்பப்படிவத்தையும் இல.7, கோவில் வீதியில் அமைந் துள்ள தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாண அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என சபையின் மாவட்ட முகாமையாளர் கே. கிருஷ்ண பாலன் அறிவித்துள்ளார். -(ஓ)

## சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

### தொண்டு



"என்னைத் தொடாதே" என்பது உனது கொள்கையாகவும், பொங்கல் பானை உனது தெய்வமாகவும் இருக்கும்வரை ஆன்மிக முன்னேற்றம் உனக்கு கை கூடாது.

எந்தச் செயலின் பயனும் நன்மை ,தீமைகளின் கலப்பாகும். தீமை கலவாத நற் செயல் எதுவும் இல்லை. தீயைச் சூழும் புகை போல்,சிறிதாவது தீமை எப்போதும் செயலை ஒட்டியிருக்கின்றது. மிகப் பெரு நன்மையையும் மிகக் குறைவான தீமையும் தரும் செயல்களையே நாம் செய்ய வேண்டும்.

உனது உதவி இல்லாததால் ஓர் எறும்பாவது இறக்கும் என்று நீ நினைக்கின்றாயா, எவ்வளவு கீழான எண்ணம் அது ! சிறிது கூட உன்னை உலகம் வேண்டி நிற்கவில்லை. இறைவனுக்காகப் பணி செய்யும் உரிமையே அவனளித்த பேறு : உதவி புரிவதல்ல. உதவி என்ற சொல்லை உன் மனத்திலிருந்து அறவே நீக்கிவிடு. நீ உதவ இயலாது . அது அபசாரமே. வணங்கு. உலகம் முழுவதையும் அத்தகைய பணிவு நிறைந்த எண்ணத்தோடு பார். அப்போது பூரண பற்றின்மை வரும்.

# போர் விதிகள் மீறப்பட்டுள்ளமை தொடர்பாக அனைத்துலக விசாரணை அவசியம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)

பொதுமக்கள் செறிவாகவுள்ள பகுதி களில் தாக்குதல்களை நடத்தும் போது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியிருப்பதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருப்பது போர்க் காலச் சட்டங்கள் அரசாங்கப்படைகளாலும் விடுதலைப்புலிகளாலும் மீறப்பட்டிருப்பது தொடர்பாக அனைத்துலக ஆணைக்குழு ஒன்றின் மூலம் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டிய தேவையை உணர்த்தியிருக்கின்றது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவதில்லை என இலங்கை அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்த போதிலும் ஜனாதிபதி செயலகத்தால் திங்கட்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் அண்மைக்கால போர்களின் போது கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பது ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனரக ஆயுதப் பாவனை, வான்படைகளின் தாக்குதல் என்பன பொதுமக்களுக்கு உயிரிழப்புக்களை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருப்பதால் அவற்றின் பாவனையை நிறுத்துமாறு எமது பாதுகாப்புப் படைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலகத்தால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதன் மூலம் இவ்வாறு கனரக ஆயுதங்களை இலங்கைப் படையினர் பயன்படுத்தியிருப்பதை ஜனாதிபதி செயலகம் ஒப்புக் கொள்கின்றது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியிருப்பதை ஒப்புக்கொண்டிருப்பதன் மூலம் இறுதியாக தன்னுடைய அதிகார பூர்வமான ஏமாற்று வேலைகளையும் கொடூரமான இராணுவ தந்திரோபாயத்தையும் இலங்கை அரசாங்கம் வெளிச்சம் போட்டுக் கண்பித்திருக்கின்றது என மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்தியத்துக்கான பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கடுமையாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபை இலங்கையின் மணலில் தனது தலையைப் புதைத்துக்கொள்வதை நிறுத்திக்கொள்வதுடன் இரண்டு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டுள்ள துஷ்பிரயோகங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக அனைத்துலக ஆணைக்குழு ஒன்றை அமைக்க வேண்டியது அவசியமானதாகும் எனவும் பிரட் அட்ம்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலயத்தின் மீது தாக்குதல் நடத்த வேண்டாம் என ஐ.நா. சபை உட்பட அனைத்துலக சமூகத்தினரால் கடந்த காலங்களில் கோரிக்கைகள் முன் வைக்கப்பட்ட போது அதனை நிராகரித்த இலங்கை அரசாங்கம் தமது தாக்குதல் நடவடிக்கைகள் அனைத்தும் விடுதலைப்புலிகளுக்கு எதிராகவே நடத்தப்பட்டுள்ளன எனவும் பொதுமக்களின் இலக்குகளைத் தாம் தாக்குவதில்லை எனவும் தெரிவித்து வந்தது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ பி.பி.சி. செய்திச் சேவைக்கு அளித்த பேட்டி ஒன்றில் பாதுகாப்பு வலயத்தின் தென்பகுதியில் உள்ள பொதுமக்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை நாம் மிகவும் மெதுவாகவே மேற்கொண்டு வருகின்றோம் எமது படையினர் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை .அவர்கள் துப்பாக்கிகளையும் தனிப்பட்ட ஆயுதங்களையும் மட்டுமே பயன்படுத்துகின்றார்கள் எனத் தெரிவித்திருந்தார். விடுதலைப்புலிகளுடனான போரின் போது இலங்கை படையினர் கனரக ஆயுங்களையும் வான்வெளித் தாக்குதல்களையும் பயன்படுத்துகின்றார்கள் என்பதற்கு நேரில் கண்ட சாட்சியங்கள், படங்கள், செய்மதிப் படங்கள் உட்பட பல ஆதாரங்கள் உள்ளன. 2009 ஜனவரிக்குப் பின்னரான காலப் பகுதியில் சுமார் 6ஆயிரத்து 400 பேர் கொல்லப்பட்டி ருப்பதாகவும் 13 ஆயிரத்துக்கும் அதிகமான வர்கள் காயமடைந்திருப்பதாகவும் ஐ.நா.வின் அறிக்கை ஒன்றிலேயே தெரிவிக்கப்பட்டிருக் கின்றது.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இடம் பெயர்ந்து வருபவர்களில் பெரும்பாலானவர்கள் பல நாட்களாக உணவு இல்லாமல் இருப்பதாகவும் சுட்டிக்காட்டும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தற்போதும் அரசாங்கத்தின் வடிகட்டல் நடவடிக்கைக்காக காத்திருக்கும் நிலையிலும் பாரிய உணவு குடிநீர் இருப்பிட வசதியீனங்களை எதிர்நோக்கு வதாகத் தெரிவித்திருக்கின்றது.

அரசாங்கத்தின் இந்த வடிகட்டல் மற்றும் பதிவுசெய்தல் நடைமுறைகளைத் தொடர்ந்தே நலன்புரி நிலையங்கள் என அரசாங்கத்தால் தெரிவிக்கப்படும் தடுப்புக்காவல் முகாம்களுக்கு மாற்றப்பட்டு தடுத்து வைக்கப்படுவார்கள் என வும் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# பாதுகாப்பு வலயத்துக்கு ஐ.நா. மனிதாபிமான குழுவை அனுப்புவது குறித்து ஆராய்வு

## மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான பணியாளர் குழுவை பாதுகாப்பு வலயத்துக்கு அனுப்புவது குறித்து ஆராய்ந்து வருகின்றோம். அதன் சாத்தியம் குறித்து அவதானிக்கின்றோம் என்று இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான பணியாளர் குழு ஒன்றை பாதுகாப்பு வலயத்துக்கு அனுப்புவது குறித்து பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து எம்மிடம் கோரிக்கை விடுத்து வருகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் அந்த கோரிக்கையை அரசாங்கம் இதுவரை நிராகரிக்கவில்லை. இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகம் சேர் ஜோன் ஹோம்ஸ் எம்முடன் நடத்திய பேச்சுகளின் போதும் இது தொடர்பில் வலியுறுத்தினார்.

எனவே இது தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. ஐ.நா. மனிதாபிமான குழுவை அங்கு அனுப்புவதன் சாத்தியம் குறித்து ஆராய்கின்றோம். இதுதொடர்பில் எதிர்காலத்திலும் ஐ.நா.வுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்பார்க்கின்றோம் என்றார். (ஓ-6)


# முதலாம் ஆண்டு நினைவு தினமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

## அமரர் சின்னத்துரை பக்தகுணசீலன்

உரிமையாளர் பூங்கனிச் சோலை
திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி



தோற்றம்
1961.07.25

மறைவு
2008.05.09

தந்தையே என அழைத்திருந்தோம்
தவறுவாய் என எண்ணவில்லை
எந்தையும் தாயுமாகி எமக்கு
எல்லாமாகி நின்றாயே
புன்னகை சிந்தும் உன் முகம்
புறம் கூறா உன் மனம்
இரப்பவர்க்கு இல்லை என்னாது
ஈந்தளிக்கும் இரு கரங்கள்
எடுப்பான தோற்றம் எவருக்கும்

ஏற்றம் அளித்திடும் உன் வாழ்வு
எம் குடும்பம் மட்டுமன்றி
அயலும் புடையும் சூழ வாழ்த்தும் உன் வாழ்க்கை
நறுக்கான பேச்சும் நளினமும்
நயவஞ்சகர்க்கு பிடிக்கவில்லை
புண்ணியங்கள் பல செய்தாய்
புகழ் மாலை பல சூட்டினாய்
ஒரு மண்டல வாழ்வு போதுமென்றா
ஓடி மறைந்திட்டாய்...

அமரர் சின்னத்துரை பக்தகுணசீலன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினமும் ஆர்ம சாந்திப் பிரார்த்தனையும் 29.04.2009 புதன்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

பூங்கனிச் சோலை
இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, முடமாவடி.

மனைவி ,பிள்ளைகள்.

(சி/2424)

# யூசுப் பதான் வாண வேடிக்கை ராஜஸ்தான் அணிக்கு முதல் வெற்றி

யூசுப் பதானின் அதிரடி அரைச் சதத்தின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டில்லி டேர் டேவில்ஸ் அணியை வீழ்த்தியது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் இந்தியன் பிரிமியர் லீக்(ஐ.பி.எல்) அமைப்பின் எட்டு அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 தொடரில் நேற்று சென் சூரியனில் நடந்த லீக் சுற்றின் 18 ஆவது போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும்வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் சந்தித்தது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சிகொடுத்தது.

காம்பீர் 8,சேவாக் 16, டில்சான் 7,டினேஷ் கார்த்திக் 4 என அடுத்தடுத்து ஆட்டமிழக்க டில்லி டேர் டேவில்ஸ் அணி 7.2 ஓவர்களில் 49 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 4 விக்கெட்டுகளையிழந்து தடுமாறியது.

எனினும் தொடர்ந்து இணைந்த டிவில்லியர்ஸ், விக்டோரி ஜோடியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் டில்லி டேர்டேவில்ஸ் அணி சரிவிலிருந்து மீண்டது.


இந்நிலையில் டில்லி டேர் டேவில்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டு களையிழந்து 143 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஏ.பி.டி வில்லியர்ஸ் 40 பந்துகளில் (5 பவுண்டரிகள் ஒரு சிக்சர் அடங்கலாக) 50 ஓட்டங்களையும் டானியல் விக்டோரி 28 பந்துகளில் (3பவுண்டரிகள் அடங்கலாக)29 ஓட்டங்களையும் மான் ஹஸ் ஆட்டமிழக்காமல் 16 பந்துகளில் (2 பவுண்டரிகள்,ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் முனாப் பட்டேல் 4 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 14 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்டுக் களையும் அணித்தலைவர் வோர்ன், மான் கரன்ஹஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் காம்ரான்கான் ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 144 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி ஒரு கட்டத்தில் 11 ஓவர்களில் 64 ஓட்டங்களைமாத்திரம் எடுத்து 5 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது.

எனினும் 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சிமித்-யூசுப் பதான் ஜோடி பிரிக்கப்படாத சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 18.3 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 147 ஓட்டங்களை குவித்து 5 விக்கெட்டுக்களால்



வெற்றி பெற்றது.

இதில் யூசுப்பதான் 30 பந்துகளில் (3 பவுண்டரிகள்,6 சிக்ஸர்கள் அடங்கலாக) 61 ஓட்டங்களையும் சிமித் 46 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 44 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் குவித்ததுடன் ஜடேஜா 16,அன்னோட்கர் 11 ஓட்டங்களும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மிஸ்ரா 3 விக்கெட்டுக் களையும் நெகரா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 5ஆவது போட்டியில் பெறும் முதலாவதுவெற்றியாகும்.

இதேவேளை டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 4 ஆவது போட்டியில் சந்தித்த முதலாவது தோல்வி இதுவாகும்.

இதில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் யூசுப் பதான் ஆட்ட நாயகனாக தெரிவானார்.

# அணித்தலைவர் கிளார்க் அசத்தல் ஆஸி. தொடரில் முன்னிலை பெற்றது



அணித்தலைவர் மைக்கெல் கிளார்க்கின் சகலதுறை ஆட்டத்தின் மூலம் 3ஆவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

பாகிஸ்தான்-அவுஸ்திரேலிய அணிகள் மோதும் 5 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒரு நாள் போட்டித் தொடர் டுபாய்,அபுதாபி ஆகிய இடங்களில் நடைபெற்று வருகிறது.

இதில் முதல் 2 போட்டிகளில் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்று தொடரில் 1:1 என்ற கணக்கில் சமனிலையில் உள்ள நிலையில் 3ஆவது ஒரு நாள் போட்டி நேற்று முன்தினம் அபுதாபியில் நடை பெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி ஆரம்பத்தில் 25 ஓவர்களில் 91 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் மைக்கெல் கிளார்க்-பெர்குஷன் ஜோடியின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் 66 ஓட்டங்களையும் பெர்குஷன் 41 ஓட்டங்களையும் ஹடின் 26,ஹயூரிஷ் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் உமர்குல் 3 விக்கெட்டுக்களையும் சகிட் அப்ரிடி 2 விக்கெட்டுக்களையும் சொகைப் மலிக் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 199 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணிக்கு சல் மான் பட்-அகமெட் ஹுசட் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 22.1 ஓவர்களில் 95 ஓட்டங்களை எடுத்தது.

எனினும் தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் யூனிஸ் கான் பூச்சியத்துடனும் மிஸ்பா உல் ஹக் 9,சகிட் அப்ரடி 6,காம்ரான் அக்மல் 8,அரபாத் 3 என அடுத் தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 47.1 ஓவர்களில் 171 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகலவிக்கெட்டுக் களையும் இழந்து 27 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இதில் மலிக் 30 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் 3 விக்கெட்டுக் களையும் ஹயூரிஷ் 2 விக்கெட்டுக் களையும் பிரக்கன்,ஹில்பென் ஹயூஸ்,ஸ்ருவெட் கிளார்க் மற்றும் சைமண்ட்ஸ்ஆகியோர்தலா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ் திரேலிய அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியின் வெற்றிக்கு சகலதுறையிலும் ஜொலித்த அணித்தலைவர் மைக்கெல் கிளார்க் ஆட்டநாயகனாக தெரிவானார்.

# சுழல் நாயகன் முரளியின் சாதனைப் பயணம்...





சிங்கப்பூர் சிங்கர் கிண்ண முக்கோணத் தொடரை தொடர்ந்து இலங்கை அணி ஒரே ஒரு சர்வதேச ஒரு நாள் போட்டியில் விளையாட மேற்கிந்தியத்தீவுகள் பயணமானது.

1996 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி போர்ட் ஒப் ஸ்பெயினில் நடைபெற்ற மேற்கிந்தியதீவுகள் அணியுடனான போட்டியில் இலங்கை அணி நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடி 48.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையுமிழந்து 251 ஓட்டங்களை எடுத்தது.

இதில் முரளிதரன் 6 பந்துகளில் 4 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியதீவுகள் அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளையிழந்து 216 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 35 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

பந்து வீச்சில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்ட மற்ற ஓவர் உட்பட 37 ஓட்டங்களைக் கொடுத்து சிம்மோன்ஸ் (45),வில்லியம்ஸ் (5) ஆகியோரை ஆட்டமிழப்பு செய்து 2 விக்கெ[illegible] கைப்பற்றினார்.

ஒரே ஒரு ஒரு நாள் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகளுடன் விளையாடிய இலங்கை அணி வெற்றியுடன் நாடு திரும்பியது.

இந் நிலையில் தொடர்ச்சியாக 8 மாதங்களாக நியூசிலாந்து,அவுஸ்திரேலியா,உலக கிண்ணம், சிங்கப்பூர் மற்றும் மேற்கிந்திய தீவுகள் தொடர்களை ஓய்வின்றி விளையாடிய இலங்கை அணிக்கு மூன்று மாத ஓய்வு கிடைத்தது.

அத்துடன் இலங்கை அணி 1996ஆம் ஆண்டில் 33 சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும் 2 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட அட்டவணையிடப்பட்டது.

இதனால் டெஸ்ட் போட்டிகளில் அசத்தி வந்த முரளிதரனுக்கு 1996ஆம் ஆண்டு ஒரு நாள் போட்டிகளில் மட்டுமே சாதிக்க முடிந்தது. **(பயணிக்கும்)**

# 2011 உலக கிண்ண கிரிக்கெட்; இலங்கையில் 12 ஆட்டங்கள்

## இந்தியாவில் இறுதி போட்டி உட்பட 29 போட்டிகள்

2011ஆம் ஆண்டு உலககிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை ஒரு அரையிறுதி உட்பட12 போட்டி களை நடத்தவுள்ளது.அத்துடன்உலககிண்ண இறுதிப் போட்டி உட்பட பெரும்பாலான ஆட்டங்கள் இந் தியாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. உலககிண்ண போட்டிகளை நடத்துவதற்கான ஏற்பாட்டு குழு நேற்று முன்தினம் மும்பையில் கூடிய போது இந்த முடிபு எடுக்கப்பட்டது. இதில் சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதி காரி ஹரூன் லோர்காட்டும் கலந்து கொண்டார்.

2011ஆம் ஆண்டுஉலககிண்ண தொடரை நடத்தும் நாடுகளில் இருந்து பாகிஸ்தான் நீக்கப்பட்ட நிலையில் உலககிண்ண தலைமைசெயலகம் லாகூரில் இருந்து மும்பைக்கு மாற்றப்பட்டுள்ளது. அத்துடன் உலக கிண்ண போட்டிகளின் நிர்வாக இயக்குனராக இந்திய கிரிக்கெட் சபையின் நிர்வாக அதிகாரியாக இருந்த பாகிஸ்தானின் பன்கர் சல்மான்பட் நீக்கப்பட்டு புதிய இயக்குநராக ரத்னகார் ஷெட்டி நியமிக்கப்பட்டார்.

உலகக்கிண்ணத்தில் நடைபெறவுள்ள 49 போட்டிகளில் 29 ஆட்டங்கள் இந்தியாவில் 8 மைதானங்களில் நடத்தப்படவுள்ளன. இதில் ஒரு காலிறுதி, ஒரு அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டி ஆகியன இந்தியாவில் நடத்த தீர்மானிக்கப்பட்டது.

அதே போன்று இலங்கை மூன்று மைதானங்களில் 12 உலக கிண்ண போட்டிகளை நடத்தவுள்ளது.

இதில் ஒரு காலிறுதி மற்றும் ஒரு அரையிறுதி போட்டிகள் உள்ளடங்கும்.. இது தவிர 2011ஆம் ஆண்டு பெப்ரவரி 18ம் திகதி நடைபெறவுள்ள உலக கிண்ண போட்டியின் ஆரம்பவிழா பங்களாதேஷில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து பங்களாதேஷிக்கு இரண்டு காலிறுதிப் போட்டிகள் உட்பட இரண்டு மைதானங்களில் 8 உலக கிண்ண போட்டிகளை நடத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. உலக கிண்ண முதல் இரண்டு ஆட்டங்களும் பங்களாதேஷில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. முன்னதாக பாகிஸ்தானும் இந்த உலக கிண்ண போட்டிகளைச் சேர்ந்து நடத்தும் நாடுகள் பட்டியலில் இருந்ததால் அங்கு 14 போட்டிகள் நடைபெறுவதாய் இருந்தது. தற்போது அந்த போட்டிகள் மூன்று நாடுகளிடையே பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

இதே வேளை போட்டிகளை நடத்துவதிலிருந்து பாகிஸ்தான் ஓரம் கட்டப்பட்டுள்ளதால் அந்த அணி பங்கேற்க மறுக்குமா என்ற கேள்விக்கு பதிலளித்த ஐ.சி.சி தலைமை நிர்வாகி லோர்கட், அந்த பிரச்சினை வரும் போது பார்த்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்.

## இலங்கைப் பிரச்சினை...

அதிகாரிகள் உட்பட பலர் கடந்த வார இறுதியில் கூடி இலங்கை விடயம் பற்றி கலந்துரையாடியுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு பொதுமக்கள் பாதுகாப்புக் குறித்து இவர்கள் ஆராய்ந்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கையில் தற்போது நிலவும் நிலைமைகள் குறித்து அமெரிக்கா அக்கறை செலுத்தியிருப்பதுடன் கள நிலைவரங்களை உன்னிப்பாக அவதானித்து வருவதாக இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.

தினமும் நாட்டில் நடைபெறும் நிகழ்வுகள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு விபரிக்கும்போது இலங்கை விடயம் குறித்தும் விபரிக்கப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேநேரம் கனரக ஆயுதங்களை பயன்படுத்தி தாக்குதல்கள் நடத்தப்படாது என இலங்கை அரசாங்கம் அறிவித்திருப்பதை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வரவேற்றுள்ளது.

இதேவேளை இலங்கை அரசாங்கம் மோதல் பிரதேசங்களில் தொண்டுப் பணியாளர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டுமென அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் நாளாந்தக் கூட்டத்தின் போது அதன் பேச்சாளர் ரொபட் வூட் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் மோதல் பிரதேசங்களில் ஐக்கிய நாடுகள் உள்ளிட்ட தொண்டு நிறுவனங்களின் தொண்டூழியர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள தடை விதித்து வருகிறது.

அத்துடன் சில தொண்டு பணியாளர்கள் இடைத்தங்கல் முகாம்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் தொண்டுப் பணியாளர்களை மோதல் பிரதேசங்களில் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள அரசாங்கம் அனுமதிக்குமானால் மோதல் பிரதேசங்களிலுள்ள பொதுமக்களுக்குத் தேவையான மருத்துவ, சுகாதார மற்றும் அத்தியாவசிய உதவிகளை வழங்கக் கூடியதாக இருக்கும் என ரொபட் வூட் தெரிவித்துள்ளார்.

(ச-5,14)

## பிரபாகரனைக் காப்பாற்ற...

யுத்த நிறுத்தத்தை அறிவிக்காது, கனரக ஆயுதங்கள் மற்றும் விமானத் தாக்குதல்களை மோதல் களங்களில் பயன்படுத்த வேண்டாம் என இராணுவத்திற்கு உத்தரவிட்டுள்ளது.

மோதல் இடம்பெறும் பகுதிகளில் கனரக ஆயுதங்கள் பயன்படுத்தப்படின் பொதுமக்களுக்கு உயிர்ச்சேதங்கள் அதிகளவில் ஏற்படும் என்பதால் இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்திருந்தது.

இவ்வாறான ஒரு அறிக்கையை அறிவித்தது ஏன் என எமக்குப் புரியவில்லை. இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் வர இருந்தமை பற்றியும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஆணையாளர் நாயகம் சேர் ஜோன் ஹோம்ஸ் வருகை பற்றியும் அரசு எவ்வித செய்திகளையும் வெளியிடவில்லை.

இந்தியாவின் வெளிவிவகார அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோர் இலங்கைக்கு வந்து பலவிதமான அழுத்தங்களை அரசுக்குக் கொடுத்துள்ளனர்.

இந்தியாவில் தேர்தல்கள் நடைபெறும் காலப்பகுதியில், இந்திய-இலங்கை தொடர்பில் அதிக அக்கறை செலுத்தப்பட்டு வருகிறது.

விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் காலம் நெருங்கிவரும் சந்தர்ப்பத்தில் இந்தியா தேவையற்ற தலையீட்டினை மேற்கொள்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் காப்பாற்றவே இந்தியா மும்முரமாக முயன்று வருகிறது என்றார். (ச-5)

## வன்னியில் அகோர ஷெல்...

முள்ளிவாய்க்கால், இரட்டைவாய்க்கால், சாளம்பன், ஒற்றைப்பனையடி மற்றும் ஐ.பி.சி. வீதி ஆகிய பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் மாலை 6 மணி தொடக்கம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிவரை ஆட்லறி, பல்குழல் வெடிகணை, மோட்டார் மற்றும் கனரக துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல்களை அகோரமாக நடத்தினர்.

2 ஆயிரத்து 600 வரையான குறுந்தூர பல்குழல் பீரங்கிக் குண்டுகள், ஆயிரம் வரையான ஆட்லறி நெடுந்தூர பீரங்கிக் குண்டுகள், 2 ஆயிரத்து 500 வரையான இடைத்தூர மோட்டார் பீரங்கிக் குண்டுகள் ஆகியன நேற்று முன்தினம் மாலையிலிருந்து நேற்று ஒரு மணி வரை மக்களின் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்துள்ளன.

அத்துடன் விமானங்கள் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிவரை குண்டுத் தாக்குதலை நடத்தியது.

முள்ளிவாய்க்காலில் இயங்கிவரும் முல்லைத்தீவு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நோயாளர்கள் சிலரும் உயிர் இழந்துள்ளனர்.

மருத்துவமனை சூழலை நோக்கி நடத்திய எறிகணைத் தாக்குதல்களிலும் 18 பேர் உயிரிழந்தனர்.

மக்கள் வாழ்ந்த குடியிருப்பு பகுதிகள் அனைத்தும் பிணக்காடாக காட்சியளிப்பதாகவும் அப்பகுதி முழுவதும் ஒரே சாவுஓலமும் அவலக் குரலும் கேட்பதாகவும் வன்னிச் செய்தியாளர் தெரிவித்துள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சுவீடன் வெளியுறவு அமைச்சர்...

வலியுறுத்துவதற்காக பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் நாட்டின் வெளியுறவு அமைச்சர்கள் இன்று கொழும்பு வரவுள்ளனர்.

அவர்களுடன் சுவீடன் வெளியுறவு அமைச்சரும் வரவிருந்த நிலையில் அவருக்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

**அனுமதி மறுக்கவில்லை என்கிறது இலங்கை அரசு**

எனினும் கார்ள் பில்டுக்கு அனுமதி மறுக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ள இலங்கை அரசின் உயர் அதிகாரியொருவர், ஒரே சமயத்தில் பல உயர்மட்ட விஜயங்களைத் தாங்கள் கையாள்வது கடினமான விடயம் என்று கூறியுள்ளார்.

சுவீடன் வெளியுறவு அமைச்சர் பிறிதொரு சமயத்தில் இலங்கைக்கு வரமுடியும் என இலங்கை அரசு தெரிவித்துள்ள கருத்தை நிராகரித்துள்ள கார்ள் பில்ட், அப்படிச் செல்லும் நோக்கம் தமக்கு இல்லை என்றும் தெரிவித்துள்ளார். இலங்கை அரசின் இந்த முடிபானது விசித்திரமான ஒன்று என்று வர்ணித்துள்ள வெளியுறவு அமைச்சர், தாம் ஒன்றும் அந்த நாட்டுக்கு வரக் கூடாது என்று தடை விதிக்கப்பட்ட ஒரு நபர் அல்ல எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் போரில் சிக்குண்டிருக்கும்பொதுமக்களின் நிலை குறித்து தாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும், அவர்களின் மனிதாபிமான நிலைமைகள் குறித்து இலங்கை அரசு கூடுதல் கவனம் செலுத்தவேண்டும்எனவும் அவர்கோரியுள்ளார்.

இது தொடர்பில் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டிருக்கும் பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிப்பான்ட் மற்றும் பிரஞ்சு வெளியுறவு அமைச்சர் பெர்ணார்ட் குஷ்னர் ஆகியோரின் விஜயத்திற்கு தமது ஆதரவை அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து அதற்கேற்ப இலங்கை அரசு நடவடிக்கை எடுப்பது அவசியம் எனவும் இலங்கையிலுள்ள அனைத்து சமூகத்தினரும் தாம் இலங்கையர் என்கின்ற எண்ணம் ஏற்படும் வகையில் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் அங்கு ஸ்திரத்தன்மை ஏற்படப்போவதில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே சுவீடன் அமைச்சருக்கு இலங்கை அரசு நுழைவு.அனுமதியை மறுத்துள்ளது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் தனது கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

அதன் தலைமைப் பொறுப்பிலிருக்கும் செக் குடியரசின் வெளியுறவு அமைச்சர் கேரல் ஸ்வாரன்பர்க் இலங்கையின் இந்த முடிபானது மிகப்பெருந் தவறு என்று கூறியுள்ளார். (ச-5,14)

## முடிவின்றித் தொடரும்...

போராட்டத்தை நடத்தினர்.

சிட்னி நகரத்தைப் பொறுத்தவரையில் கடந்த இரண்டு வார காலப் பகுதியில் தமிழர்கள் நடத்தும் இவ்வாறான போராட்டங்கள் வழமையான ஒரு நிகழ்வாகிவிட்டது எனக் குறிப்பிடுகின்றார் தமிழர்களின் இந்தப் போராட்டம் தொடர்பான பேச்சாளரான மருத்துவர் சாம்பவி.

அவுஸ்திரேலியாவின் ஏ.ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கே இந்தத் தகவலை அவர் தெரிவித்தார். எம்மைப் பொறுத்தவரையில் கடந்த இரண்டு வார காலமாக நாம் நாளாந்தம் இவ்வாறான போராட்டங்களுக்கு வரும்போது எமது கல்வி எமது தொழில் என்பவற்றை சமாளித்தே வரவேண்டியிருக்கின்றது. அவுஸ்திரேலிய அரசாங்கம் எமது வேதனையை புரிந்து கொள்ள வில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டி னார்.

(ச-5)

## பிரபாகரன் உள்ள...

நோக்கி முன்னேறியுள்ளனர். பிரபாகரனின் மறைவிடத்திலிருந்து 3.5 கிலோ மீற்றர் தொலைவில் இராணுவத்தின் 58-வது படையணி இப்போது நிலை கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பிரபாகரனும் அவரது மிக நம்பிக்கைக்கு உரியவர்களான பொட்டு, சூசை, பானு என்போர் வெள்ளா முள்ளிவாய்க்கால் பகுதியில் மிகப் பாதுகாப்பான பதுங்கு குழிக்குள் இருப்பதாக பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறி வந்து இராணுவத்திடம் சரணடைந்த புலி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை விமானப் படையின் ஆளில்லா விமானம் விடுவிக்கப்படாத பகுதியை மிக நுணுக்கமாக அவதானித்து வருகிறது. அதேவேளை கடற்படையினரும் வலைஞர்மடத்தில் இருந்து வட்டுவாகல் பகுதியில் உள்ள 7 கி.மீ கடற் பிராந்தியத்தை இடைவிடாது கண்காணித்து வருகின்றனர் என்றும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை புலிகளிடம் சிக்கியுள்ள பொதுமக்களை மீட்கும் மனிதாபிமான படை நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.

இராணுவத்தின் 53ஆம் 58ஆம் படையணியினர் நேற்று அதிகாலை அடையாளம் காணப்பட்ட விடுதலைப் புலிகளின் இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். அத் தாக்குதல் காரணமாக வாழையன்மடத்துக்கு தெற்கிலும் தென்மேற்கிலும் புலிகளால் அமைக்கப்பட்டு கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்த 600 மீற்றர் நீளமான இரு மண் அணைகளை படையினர் கைப்பற்றியுள்ளனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (ச-5,14)


**மீண்டும் விற்பனைக்கு**

தரமான கொங்கிறீற் கற்கள், வேலித் தூண்கள், அலங்காரத் தூண்கள், பூச்சாடிகள் மற்றும் அனைத்து வகையான கொங்கிறீற் உற்பத்திகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:-
17, ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(கெங்காதரன் வைத்தியசாலை அருகில்)
T.P. :-0771277113


## இறுதி ஒருவரை மீட்கும்...

ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

பாதுகாப்பு வலயத்துக்குள் இன்னமும் விடுதலைப்புலிகள் இருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர்கள் சரணடைவதற்கு அழைப்பு விடுத்துள்ளபோதும் எவரும் இது வரை சரணடையவில்லை.

பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களில் இறுதியாகவுள்ள ஒருவர் விடுவிக்கப்படும் வரை மீட்பு நடவடிக்கை தொடரும். விடுதலைப் புலிகளின் தலைவரைப் பற்றியோ வேறு எவரைப் பற்றியோ நாம் கவலையடையப் போவதில்லை என சி.என்.என். - ஐ.பி.என். தொலைக்காட்சிக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உயிருடன் கைது செய்யப்பட்டால் முதலில் அவர் இலங்கை சட்டத்துக்கு அமைய தண்டணைக்கு உட்படுத்தப்படுவார் எனவும் அதன் பின்னர் எவர் வேண்டுமாயினும் அவரை அழைத்துச் செல்லாம் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதனைச் செய்வதற்கு இந்தியாவுக்கு உரிமை உள்ளது என நான் நினைக்கிறேன். ராஜீவ்காந்தியின் கொலை தொடர்பில் பிரபாகரன் தேடப்பட்டு வருகிறார். பிரபாகரன் தொடர்பில் எந்தவொரு நாட்டு அரசாங்கமும் எம்முடன் வந்து கலந்துரையாடி முடிவொன்றுக்கு வரலாம். இது தான் எனது தனிப்பட்ட நிலைப்பாடு என ஜனாதிபதி தனது செவ்வியில் கூறினார்.

**போர் நிறுத்தம் இல்லை**

இதேவேளை பணயக் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மக்களை விடுவிக்க வேண்டியது தனது கடமையெனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மக்களை விடுவிக்கும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் ஈடுபடுவார்கள் எனக் கூறினார்.

எனினும் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தி அவர்கள் தாக்குதலை நடத்தமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனைத்துலக சமூகத்திடம் இருந்து எந்தளவுக்கு அழுத்தங்கள் வந்தாலும் போர் நிறுத்தம் ஒன்றை அரசாங்கம் ஒரு போதும் நடைமுறைப்படுத்தாது என ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபயவர்த்தன திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற அரசாங்கத்தின் அறிவித்தலை சில ஊடகங்கள் திரிவுபடுத்திவிட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ச-5)


Praise The Lord
**Background CD**
Video Backgrounds & Album Backgrounds
Karisma Album, Digital Album, Visiting Cards, Invitation, Digital Flex Psd Images Available
**Star Digital**
077 1308636, 077 8893465
ஒரு சீடி ரூ-60 மட்டும் இந்த விற்பனை 15 நாட்கள் மட்டும்
Murugamoorthi Street, Nelliady, Karaveddy. (2570)

**எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை**
April 27 முதல் மணமக்கள் சங்கமமாகும்

"கெட்டி மேளம்" திருமண சேவை
Keddy Melam Wedding Service
(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)
எமது நிறுவனத்தில் அடையாள அட்டை, பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே
**மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்**
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். E.Mail: moorthydigital@gmail.com

**இடம் மாற்றம்**
சகல விதமான LA,TA,AN,BA,TDA,CXA,MN,STK,STR,KA ஆகிய I.Cக்கள், ரான்சிஸ்ரர்கள், கொண்டன்சர்கள், ரான்ஸ்போமர்க்ள், T.V. ரான்ஸ்போமர்கள், வீடியோ, ஓடியோ கெட்டுகள், மல்ரிமீற்றர்கள், பவுத்துகள், D.C யக்பின் வகைகள் மற்றும் எலக்றோனிக் உதிரிப்பாகங்கள் ஆகியவற்றை நிதான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
சகல விதமான எலக்றோனிக், எலக்றிக்கல் பொருட்களை திருத்திக் கொள்ள நாடுங்கள்.
நியூ சிற்றி றேடேர்ஸ், 319 A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.021 222 3226 குறிப்பு:-யாழ் நகரில் இந்த ஸ்தாபனத்துக்கு கிளைகள் இல்லை. (C-2417)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.04.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.